

# வ உ சி முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி

பேராசிரியர் நா. வானமாமலை

# வ. உ. சி.
# முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி

பேராசிரியர்
நா. வானமாமலை

மக்கள் வெளியீடு 34
முதல் பதிப்பு பிப்ரவரி 1980
மறு அச்சு ஏப்ரல் 1999
உரிமை பதிவு

பொதுப் பதிப்பாசிரியர் மே.து. ராசு குமார்

விலை ரூபாய் பதினைந்து

**மக்கள் வெளியீடு**
24 உனிசு அலி சாகிப் தெரு
எல்லிசு சாலை சென்னை 600 002
தொலைபேசி 8545532 / 8548250

மக்கள் அச்சகம் சென்னை 600 002

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பதிப்புரை | | 4 |
| மறு அச்சுக்கான பதிப்புரை | | 8 |
| வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி | | 9 |
| இணைப்பு: | | |
| 1 | வ.உ.சி. நூல்கள் | 41 |
| 2 | சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி | 42 |
| 3 | நாளேடுகளில் செய்திகள் | 47 |
| 4 | வரலாறு படைத்த வ.உ.சி. வாழ்க்கை | 50 |

# பதிப்புரை

விடுதலைப் போராட்டத்தின் வரலாறாக வாழ்ந்து காட்டிய வீர மறவர்கள் பலர் தமிழகத்தில் பிறந்திருக்கின்றார்கள். ஆனால், விடுதலை உணர்வுக்கு வித்திட்டுத் தமிழகத்தினரைத் தட்டியெழுப்பிப் போராட்ட களத்திற்கு அழைத்துச் சென்ற பெருமை வ.உ. சிதம்பரனார் அவர்களையே சாரும்.

விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டதற்காகச் சிறையிலடைக்கப்பட்டுக் கொடுமையான தண்டனைகளை ஏற்ற முதல் தமிழர் வ.உ.சி. என்று கூறலாம். நாட்டு விடுதலையில் மட்டுமல்லாது வேறு பல துறைகளிலும் அவரே முன்னவராக இருந்திருக்கிறார். தொழிற்சங்க இயக்கம், கூட்டுறவு இயக்கம், தமிழ் மறுமலர்ச்சி இயக்கம் என்று பல்வேறு துறைகளில் முன்னவராகத் திகழ்ந்தவர் வ.உ.சி.

திலகரது தலைமையிலான தீவிர முறைக் காங்கிரஸ் குழுவுக்குத் தமிழகத்தில் முன்னணி வீரர்களாக இருந்தவர்கள் வ.உ.சி.யும் பாரதியும் ஆவார்கள். திலகர் மறைவுக்குப் பிறகு காங்கிரஸ் இயக்கம் தீவிரமற்றவர்கள் பிடியில் வந்தவுடன் வ.உ.சி. போன்றவர்கள் ஒதுக்கப்பட்டார்கள். வ.உ.சி.யைப் பயன் கொள்ளக் காங்கிரஸ் இயக்கம் தவறிவிட்டது.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. சிறையில் இருக்கும் போதே, மக்களுடைய விடுதலை எழுச்சிக்குத் தலைமையேற்ற வ.உ.சி.யைச் சென்னையில் கூடிய காங்கிரஸ் மகாசபை கண்டித்திருக்கிறது. வ.உ.சி. சிறை செல்வதற்கு முன்னர் சூரத் மாநாட்டில் திலகருக்குத் துணையாக நின்றதுடன் தூத்துக்குடியில் தொழிலாளர்களைத் திரட்டிப் பல வேலை நிறுத்தங்களுக்கும் தலைமை தாங்கியிருந்தார். மேலும், அவர் நடத்தி வந்த நெல்லை தேசாபிமான சங்கம் முழு விடுதலை என்ற அடிப்படைத் திட்டத்தைக் கொண்டிருந்தது. அடுத்துப் பல புரட்சியாளர்களிடம் வ.உ.சி. தொடர்பு கொண்டிருந்தார். ஆங்கில அரசின்கீழ் சில பதவிகளைப் பெறுவதையே தொடக்கத்தில் திட்டமாகக் கொண்டிருந்த காங்கிரஸ் இயக்கத்தால் இவற்றை முழுமையாக ஏற்க முடியவில்லை. தொழிலாளர்களையும் பொதுமக்களையும் திரட்டி விடுதலை உணர்வுக்கு வேகமூட்டிய வ.உ.சி.யின் நடைமுறைக்கும் தீர்மானம் போட்டு வேலை வாய்ப்புப் பெற முயன்ற காங்கிரஸ் நடைமுறைக்கும் முரண்பாடு இருந்து கொண்டே வந்துள்ளது.

பின்னர், காந்தியின் பல கொள்கைகளையும் நடைமுறைகளையும் ஏற்க அவரால் இயலவில்லை. இடையிடையே காந்தியின் ஒரு சில திட்டங்களை வ.உ.சி. வரவேற்றிருந்தாலும், அவருக்கிருந்த வேறுபாடு தொடர்ந்து நீடித்தது.

தமிழ் நாட்டில் நீதிக்கட்சி (ஜஸ்டிஸ் கட்சி) தொடங்கப் பட்டபோது, வேலைவாய்ப்புக்களில் வகுப்பு முறையில் இடம் என்ற திட்டத்தை அவர் நியாயமானதாகக் கருதினார். ஆனால், இத்திட்டத்தைக் காங்கிரசார் எதிர்த்தார்கள். விடுதலை உணர்வில் ஊறித் திளைத்த அவரால் ஆங்கில ஆதரவுப் போக்குக் கொண்ட நீதிக் கட்சியினையும் முழுமை யாக ஏற்க முடியவில்லை.

சென்னைத் தொழிலாளர் சங்கம் போன்ற தொழிற்சங்கப் பணிகளில் அவர் முழு ஈடுபாடு காட்டினார். சிறையிலிருந்து விடுதலை பெற்ற பிறகு 24 ஆண்டுகள் அவர் உயிர் வாழ்ந்திருந் தார். இந்த நீண்ட காலப்பகுதியில் அவர் முற்போக்கு எண்ணம் கொண்டவராகவே இருந்து வந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. ஆனால் இந்தக் காலப்பகுதியில் அவர் வறுமை யில் வாடினார் என்பது வேதனைக்குரிய செய்தியாகும். முற் போக்கான எண்ணம் கொண்டவரும் தொழிற்சங்கப் பணி களில் ஈடுபட்டவருமான வ.உ.சி.க்குத் தமிழகத்தில் இருந்த காங்கிரஸ் தலைமை எவ்வித உதவியும் செய்ய முன் வரவில்லை. அவர் இறந்த பிறகுகூட முழுமையான சிறப்புச் செய்யத் தயங்கினர். அதிகார முறையில் எழுதப்பட்ட பட்டாபி சீத்தாராமையாவின் காங்கிரஸ் வரலாறு என்ற நூலில் வ.உ.சி.யைப் பற்றி ஓர் இடத்தில்கூடக் குறிப்பிடவில்லை.

இருப்பினும், வ.உ.சி. மக்கள் உள்ளங்களில் மறக்க முடியாத இடத்தைப் பெற்றுவிட்டார். அவருடைய பெயரில் தெரு இல்லாத ஊரோ நகரமோ இல்லை என்று கூறுமளவுக்கு நிலைத்த புகழ் பெற்றிருக்கிறார்.

நாட்டு விடுதலைக்காகக் கடுமையான சிறைத் தண்டனை ஏற்றவர், விடுதலை இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய காங்கிரஸ் கட்சியுடன் முரண்பட்ட நிலையையும் 1915இல் திலகரைச் சந்தித்து ஜெர்மன் உதவியுடன் இந்தியாவில் புரட்சி நடத்துவது பற்றி விவாதித்ததையும் தொடர்ந்து தொழிற் சங்கப் பணிகளில் ஈடுபட்டு வந்ததையும் தமிழ்நாட்டுச் சூழலில் பிராமணர் அல்லாதார் இயக்கத்தின் சில கருத்துக்களை ஏற்று உடன்பட்டதையும், ஆனால் அதில் தன்னை இணைத்துக் கொள்ள விரும்பாததையும் தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தில் ஆர்வம் கொண்டிருந்ததையும் நுணுகிப் பார்க்கவேண்டும்.

இந்திய விடுதலைப் புரட்சி, தொழிற் சங்க இயக்கம், வேலைகளுக்கு வகுப்பு முறை இடம், தமிழ் மறுமலர்ச்சி ஆகிய யாவும் இணைந்த தனியான, முழுமையான அரசியல் இயக்கம் எதுவும் அன்று இல்லாத நிலையில், வ.உ.சி. ஒதுங்கிய வாழ்வு வாழ்ந்தாலும் அவரது சிந்தனையோட்டம் இவை இணைந்த இயக்கமொன்றைக் கனவு கண்டிருக்கலாம்.

ஆனால், தமிழகத்தில் இருந்த சில அரசியல் இயக்கங்கள் இதில் ஒவ்வொரு கருத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. நாட்டு நிலை, தமிழக நிலை இரண்டையும் கணக்கில் எடுத்துக் கொண்டிருந்த வ.உ.சி. பொதுக் கருத்தொன்றை உருவாக்க விரும்பியிருக்கக்கூடும்.

அன்றைய அரசியல் சூழல் அதற்கு முழுமையான இடம் கொடுக்காவிட்டாலும் இன்னும் இந்தப் பொதுக் கருத்து உருவாக வேண்டிய தேவை நீடித்து வருகிறது என்று கருது வோர் இருக்கிறார்கள். இன்றைய அரசியல் நிலை வளர்ச்சி பெற்றிருக்கும் தன்மையையொட்டி, இந்தப் பின்னணி முழுமையாக ஆராயப்படுவது பயன் தருவதாக அமையும்.

வ.உ.சி. போன்று வேறு பல விடுதலை—மறுமலர்ச்சி இயக்கத்தினரின் வரலாறும் வாழ்வும் ஆராயப்பட வேண்டும். பாரதி, சுப்பிரமணிய சிவா, சிங்காரவேலர், திரு.வி.க., சக்கரைச் செட்டியார், ஜீவா, பெரியார் போன்ற பலருடைய வாழ்வு மக்களுக்குத் தெரிய வழிசெய்யப்பட வேண்டும். கருத்து வேறுபாடுகள் பல இருப்பினும் இவர்கள் பணி தமிழ் மக்களுக்குப் பயனாக அமைந்து பல்வேறு துறைகளில் வழி காட்டியுள்ளது என்பதை மறுப்பார் யாருமில்லை. இவர்களது பணிகளைப் பற்றிய தெளிவான வரையறைகளும் மதிப்பீடு களும் எதிர்காலத் தலைமுறையினருக்கு ஆக்க முறையிலான அடிப்படைகளாக அமையமுடியும்.

நாடு விடுதலை பெற்ற பிறகு, மாநில—மைய அரசுகள் இத்தகைய முன்னோடிகளின் வரலாறுகளை முழுமையாகக் கொண்டு வர எத்தகைய முன் முயற்சிகளும் எடுக்கவில்லை என்பது வருந்தத்தக்கதாகும்.

வீரபாண்டிய கட்டபொம்மன் முதல் பெரியார் வரை தமிழகத்தில் வாழ்ந்த பலரைப்பற்றிய செய்திகளும் குறிப்பு களும் அரசுப் பதிவேடுகளிலும் ஆவணங்களிலும் மிகுதியாகக் கிடைக்கின்றன. இவற்றைத் தொகுப்பதும் முறைப்படுத்து வதும் மதிப்பீடு செய்வதும் நமது கடமையாகும். சில சிறப்பு மிக்க பதிவேடுகள், ஆவணங்களிலிருந்து அகற்றப்பட்டு—அழிக்கப்பட்டு, விவரங்கள் பலவற்றை அறிய முடியாத நிலையும் தோன்றியிருப்பதைப் பார்க்கிறோம்.

இந்த மாவீரர்களது பணிகளை மக்கள் முன் வைக்க இரண்டு கட்டங்களில் முயற்சிகள் மேற்கொள்வது நல்லது. முதல் கட்டமாக இவர்களைப் பற்றிக் கிடைக்கும் அனைத்துச் சான்றுகளையும் திரட்டி முழுமையாக வெளியிடவேண்டும். இவர்களைப் பற்றிய குறிப்புகள், இவர்களது எழுத்துக்கள், சொற்பொழிவுகள், ரகசியப் போலீசார் குறிப்புகள், அரசு அதிகாரிகளின் அறிக்கைகள், நீதிமன்றத் தீர்ப்புகள், தொடர்

பான ஏடுகளின் செய்திகள், இவர்களுடன் வாழ்ந்தவர்களது கருத்துக்கள் ஆகிய யாவற்றையும் தொகுத்து வெளியிடலாம்.

எந்தத் துறையாக இருப்பினும் சான்றுகளையும் விவரங்களையும் தொகுப்பதே இன்று தனி ஆய்வு முறையாக வளர்ந்து வருகிறது. அடுத்த கட்டம், இந்தச் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டு ஆய்வுகளை மேற்கொள்வதாகும். இப்பணிகளை ஒரு சில தனி மனிதர்களோ, ஆய்வாளர்களோ மட்டும் நிறைவேற்றிவிட முடியாது. பலருடைய கூட்டு முயற்சியும் உழைப்பும் இதற்கு அவசியமாகும். பல்கலைக்கழகங்களும் ஆய்வு நிறுவனங்களும் ஒத்துழைத்தால் பணி விரைவும் நிறைவும் பெறும்.

'மக்கள் வெளியீடு' இப்பணியில் தனது இயன்ற பங்கினைச் செலுத்த முதல் முயற்சியாகக் கட்டபொம்மனைப் பற்றிய சில குறிப்புக்களைத் தொகுத்து வெளியிட்டது. அந்த மாவீரனைப் பற்றிய செய்திகள் இன்னும் எவ்வளவோ உண்டு. சென்னை ஆவணம், லண்டன் ஆவணம் ஆகியவற்றில் இருக்கும் பதிவேடுகளையும் தொகுத்துத்தரவேண்டும்.

வீரபாண்டியக் கட்டபொம்மன்—ஆய்வுத் தொகுப்பு என்ற நூலின் முதல் பதிப்பு இருப்பில் இல்லாததையடுத்து மேலும் பல புதிய செய்திகளுடன் கூடிய விரிவான பதிப்பு ஒன்றை வெளியிட முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதுபோன்று மற்றவர்களுடைய வரலாற்றுக் குறிப்புகளையும் சான்றுகளையும் மக்கள் வெளியீடு வெளியிட விழைகின்றது. இப்பணியில் அனைவருடைய—குறிப்பாக ஆய்வாளர்களுடைய ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

'வ.உ.சி. முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி' என்ற இந்நூல் 'புதிய அலை' என்ற ஏட்டில் 19-12-1976 முதல் 30-1-1977 வரை தொடராக வெளியிடப்பட்டதாகும். இது முழுமையான வாழ்க்கை வரலாற்று நூல் அல்ல என்றாலும் வ. உ. சி. அவர்களது வாழ்க்கையின் சிறப்பை இந்நூலில் பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள் தெளிவாக வரையறுத்துக் காட்டுகின்றார்.

தமது நூல்களைத் தொடர்ந்து வெளியிட வாய்ப்பளித்து வரும் பேராசிரியர் அவர்களது அறுபதாம் ஆண்டு நிறைவினையொட்டி, அவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அவரது பத்து நூல்களை அச்சிட 'மக்கள் வெளியீடு' ஏற்பாடு செய்துள்ளது. மார்க்சீய ஆய்வுப் பேரறிஞர் நா. வா. அவர்களின் பணி சிறக்க—மேலும் அவர்களிடமிருந்து பல்வேறு துறைகளில் வழிகாட்டுதல் பெறத் தமிழ் மக்களின் சார்பில் 'மக்கள் வெளியீடு' விழைகின்றது.

**மே. து. ராசு குமார்**

## மறு அச்சுக்கான பதிப்புரை

இந்த நூலின் முதல் பதிப்பு வெளியான சில வாரங்களில் பேராசிரியர் நா. வா. அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்கள். இப்போது 18 ஆண்டுகள் கடந்து மறு அச்சு வெளியிடப்படுகிறது.

இதனை நூலாக்கும்போதே, பல மாறுதல்களைச் செய்ய வேண்டிய தேவைகள் உருவாகியிருந்தன. பேராசிரியர் அவர்களும் அத்தகைய திருத்தங்களைச் செய்யவே விழைந்தார்கள். பேராசிரியர் நா. வா. அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவையொட்டி, பத்து நூல்கள் வெளியிட இருந்த முனைப்பில், நான் அவருக்குக் கொடுத்த நெருக்குதல்களால், இந்த மாற்றங்கள் அப்போது இயலாததாகிவிட்டன. ஆனால், அடுத்த பதிப்பில் செய்யமுடியும் என்ற நம்பிக்கையை ஒட்டியே நீண்டதொரு பதிப்புரையை அப்போது நான் எழுதினேன். ஆனால், பேராசிரியர் நா. வா. அவர்களால் எப்போதுமே இந்த மாற்றங்களைச் செய்ய முடியாத நிலை ஏற்படும் என்று யாருமே அப்போது எண்ணிப் பார்க்கவில்லை.

இருப்பினும், பேராசிரியர் நா. வா. அவர்கள் இருந்திருந்தால் எத்தகைய மகிழ்ச்சியும் நிறைவும் கொண்டிருந்திருப்பாரோ அதையும் மிஞ்சும் அளவில் இந்தப் பணிகளைப் பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியம் அவர்களும் பேராசிரியர் ஆ. இரா. வேங்கடாசலபதி அவர்களும் தற்போது மேற்கொண்டு வருகிறார்கள். இத்தகைய அவர்களது நூல்கள் பலவும் மக்கள் வெளியீடு வழியாகவே வெளிவருகின்றன என்பதும் பெருமையே தருகிறது. இந்தப் புதிய பணிகளால் வ.உ.சி. ஆய்வுகள் மேலும் செழுமையடைந்திருக்கின்றன — செம்மைப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதற்கேற்ப இந்த நூலில் சில மாறுதல்கள் தேவைதான் என்றாலும், பேராசிரியர் நா வா. அவர்கள் தம் படைப்பாகவே மறு அச்சு செய்யப்படுகிறது.

பேராசிரியர் நா. வா. அவர்களின் எழுத்துக்கள் யாவற்றையும் தொகுப்புகளாகக் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணத்தில், முன்னர் நூல்களாக வெளிவந்திருந்த பல படைப்புகள் மறுஅச்சு செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டன. நோக்கம் நல்லதுதான் என்றாலும், தொகுப்புப் பணியின் சுணக்கத்தால், ஒரு தலைமுறையினரின் பயன்பாட்டிலிருந்து அவரது படைப்புகளை மறைத்துவிடக்கூடாது என்பதால், சில நூல்களை மறு அச்சு செய்ய முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. என்றாலும், தொகுப்பு முயற்சிகள் முழு முனைப்புடன் தொடரும்.

**மே. து. ரா.**

# வ. உ. சி.
# முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி

திலகரது உறுதியான கருத்து, "சிதம்பரம் பிள்ளை, தமிழ் நாட்டின் தலை சிறந்த வீரம் நிறைந்த விடுதலைப் போராட்ட வீரர்" என்பதாகும் என்று ராஜகோபாலச்சாரியார் 1903இல் எழுதினார்.

> சிதம்பரம் பிள்ளை மேன்மை தங்கிய மன்னர்பிரானது பிரஜைகளில் இரு வர்க்கத்தாரிடையே பகைமையையும் வெறுப்பையும் ஊட்டுபவர். (இரு வர்க்கத்தார்—ஆங்கிலேயர், இந்தியர்) அவர் வெறுக்கத்தக்க ராஜத்துரோகி; அவருடைய எலும்புகள் கூட, சாவிற்குப்பின் ராஜத் துவேஷத்தையூட்டும்

என்று பின்ஹே என்ற நீதிபதி வ.உ.சி.யைப் பற்றித் திருநெல்வேலிக் கலகத்திற்குத் தலைமை தாங்கிய குற்றத்திற்காகத் தண்டனையளிக்கும் பொழுது தமது தீர்ப்பில் எழுதினார்.

பாரதி, விஞ்சு துரை என்ற கலெக்டரோடு, வ.உ.சி. விவாதித்த நிகழ்ச்சியைக் கற்பனை கலந்து இரண்டு பாடல்களாக எழுதியுள்ளார். அவற்றுள், ஒரு பாடலில் விஞ்சு துரை அடித்து, மிதித்து சிறைக்குள்ளே தள்ளுவேன் என்று மிரட்டுகிறான். அதற்குப் பதிலாக மற்றோர் பாடலில், அடித்தாலும், வெட்டி உடலைத் துண்டு துண்டாக்கினாலும் "இதயத்துள்ளே இயங்கும் மகாபக்தி ஏகுமோ—நெஞ்சம் வேகுமோ" என்று வ. உ. சி. பதில் சொல்லுவதாக எழுதியிருக்கிறார்.

## கலெக்டர் வின்ச் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்குச் சொல்லுதல்

நாட்டி லெங்கும் சுதந்திர வாஞ்சையை
நாட்டினாய்—கனல்—மூட்டினாய்
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்—வலி—காட்டுவேன் (நாட்டி)

கூட்டங் கூடிவந் தேமா தரமென்று
கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்
ஓட்ட நாங்க ளெடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய்—பொருள்—ஈட்டினாய் (நாட்டி)

கோழைப்பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய்—சட்டம்—மீறினாய்
ஏழைப் பட்டிங் கிறந்த லிழிவென்றே
யேசினாய்—வீரம்—பேசினாய் (நாட்டி)

அடிமைப்பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்—புன்மை—போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய்—ஆசை—யூட்டினாய் (நாட்டி)

தொண்டொன் றேதொழி லாக்கொண் டிருந்தோரைத்
தூண்டினாய்—புகழ்—வேண்டினாய்
கண்டகண்ட தொழில்கற்க மார்க்கங்கள்
காட்டினாய்—சோர்வை—யோட்டினாய் (நாட்டி)

எங்கு மிந்த ஸ்வராஜ்ய விருப்பத்தை
ஏவினாய்—விதை—தூவினாய்
சிங்கம் செய்யுந் தொழிலைச் சிறுமுயல்
செய்யவோ—நீங்கள்—உய்யவோ? (நாட்டி)

சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன்—குத்திக்—கொல்லுவேன்
தட்டிப் பேசுவோ ருண்டோ? சிறைக்குள்ளே
தள்ளுவேன்—பழி—கொள்ளுவேன். (நாட்டி)

### கலெக்டர் வின்சுக்கு
### ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை சொல்லிய மறுமொழி

சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்—இனி—அஞ்சிடோம்
எந்த நாட்டினு மிந்த அநீதிகள்
ஏற்குமோ—தெய்வம்—பார்க்குமோ?

வந்தே மாதர மென்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்—முடி—தாழ்த்துவோம்
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ?—அவ—மானமோ?

பொழுதெல்லா மெங்கள் செல்வங்கொள்ளை கொண்டு
போகவோ?—நாங்கள்—சாகவோ?
அழுதுகொண் டிருப்போமோ? ஆண்பிள்ளைகள்
அல்லமோ?—உயிர்—வெல்லமோ?

நாங்கள் முப்பதுகோடி ஜனங்களும்
நாய்களோ?—பன்றிச்—சேய்களோ?
நீங்கள் மட்டு மனிதர்க ளோவிது
நீதமோ?—பிடி—வாதமோ?

பார தத்திடை யன்பு செலுத்துதல்
பாபமோ?—மனஸ்—தாபமோ?
கூறு மெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ—இதிற்—செற்றமோ?

ஒற்றுமை வழியொன்றே வழியென்ப
தோர்ந்திட்டோம்—நன்கு—தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள் செய்யுங்கொடு மைக்கெலாம்
மலைவுறோம்—சித்தம்—கலைவுறோம்

சதையைத் துண்டுதுண் டாக்கினு முன்னெண்ணம்
சாயுமோ?—ஜீவன்—ஓயுமோ?
இதயத் துள்ளே யிலங்கு மஹாபக்தி
யேகுமோ?—நெஞ்சம்—வேகுமோ?

பிரிட்டிஷ் அரசின் அதிகார வர்க்கம் சிதம்பரம் பிள்ளை மீது கொண்டிருந்த கண்ணோட்டத்தைப் பின்ஹே என்ற நீதிபதியும், விஞ்சும் கூறிய கருத்துக்கள் காட்டுகின்றன. அவர்கள் சிதம்பரம் பிள்ளையை வெறுத்தார்கள். ராஜத் துரோகி என்று கருதினார்கள். அவரையும், அவரது கருத்துக் களையும் அழித்துவிட முயன்றார்கள்.

இந்திய விடுதலையில் ஆர்வமுடையவர்கள் அவரை வீரர் என்று போற்றினார்கள். அவர் விஞ்சுதுரை போன்ற ஆதிக்க வெறியர்களைத் தைரியமாக எதிர்த்ததை இந்தியரனைவருக் கும் முன் மாதிரியாகக் காட்டினார்கள். இந்நிகழ்ச்சியிலிருந்து பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் மனப்பாங்கையும், அதை எதிர்ப்பதற்குத் தேவையான துணிவையும் வ. உ. சி. யின் எடுத்துக்காட்டின் மூலம் சுட்டிக் காட்டினார்கள்.

ஆதிக்கக்காரர்களின் ஆத்திரத்துக்குள்ளானவர் வ. உ. சி. விடுதலை விரும்பிகளின் அபிமானத்துக்கு ஆளானவர் வ.உ.சி. ஓய்ந்து கிடந்த தமிழகத்தில் விடுதலைப்புரட்சிச் சுவாலையாக ஒளிர்ந்தவர் சிதம்பரம் பிள்ளை.

**இளமை வாழ்க்கை**

தமிழ் நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் தொடக்கக் காலகட்டத்தோடு சிதம்பரம் பிள்ளையின் இளமை தொடர்புடையது. பிரிட்டிஷ் அதிகாரத்திற்கும், ஆணவ மிரட்டலுக்கும் அஞ்சி, உயிர்ப்பு ஒடுங்கித் தமிழக மக்கள் செயலற்றிருந்த காலம். பிரிட்டிஷ் துப்பாக்கிகளுக்கும், சிறைக் கூடங்களுக்கும், தூக்குமரங்களுக்கும் பயந்து இந்திய மக்கள் சோர்வுற்றிருந்த காலம். பிரிட்டிஷ் சுரண்டல்காரர்கள் நமது செல்வத்தைக் கொள்ளை கொண்டு சென்றார்கள். நமது மக்களது உழைப்பைச் சுரண்டிக் கொழுத்தார்கள். அடிமைகளாக உழல்வதைத் தவிர வேறு வழியின்றித் தமிழ் மக்கள் நடைபிணங்களாகத் திரிந்தார்கள்.

இந்நிலையைப் பாரதி 'போகின்ற பாரதம்' என்ற பாடலில் வருணிக்கிறார். தேசத்தை மனிதனாகக் கற்பனை செய்து, அம்மனிதனது அவல நிலையை விளக்கி, அவனை 'போ' என்று விரட்டுவதாகக் கூறுகிறது 'போகின்ற பாரதம்'. பாரதி அடிமைத்தனத்தை வெறுத்துப் போராடாத பாரதத்தைக் கடிந்து, அதன்மீது வெறுப்பை உமிழ்கிறார்.

**போகின்ற பாரதம்**

வலிமையற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவிலா முகத்தினாய் போ போ போ
பொறியிழந்த விழியினாய் போ போ போ
ஒலியிழந்த குரலினாய் போ போ போ
ஒளியிழந்த மேனியாய் போ போ போ
கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மையென்றும் வேண்டுவாய் போ போ போ

இன்றுபார தத்திடை நாய்போலே
ஏற்றமின்றி வாழுவாய் போ போ போ
நன்றுகூறில் அஞ்சுவாய் போ போ போ
நாணிலாது கெஞ்சுவாய் போ போ போ

சென்றுபோன பொய்யெலாம் மெய்யாகச்
சிந்தைகொண்டு போற்றுவாய் போ போ போ
வென்றுநிற்கு மெய்யெலாம் பொய்யாக
விழிமயங்கி நோக்குவாய் போ போ போ

வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டுவார்த்தை கற்கிலாய் போ போ போ
நூறு நூல்கள் போற்றுவாய் மெய்கூறும்
நூலிலொத் தியல்கிலாய் போ போ போ
மாறுபட்டவாதமே ஐந்நூறு
வாயில் நீள ஓதுவாய் போ போ போ
சேறுபட்ட நாற்றமும் தூறுஞ் சேர்
சிறிய வீடு கட்டுவாய் போ போ போ

ஜாதிநூறு சொல்லுவாய் போ போ போ
தருமமொன் றியற்றிலாய் போ போ போ
நீதிநூறு சொல்லுவாய்—கா சொன்று
நீட்டினால் வணங்குவாய் போ போ போ
தீதுசெய்வ தஞ்சிலாய் நின்முன்னே
தீமைநிற்கி லோடுவாய் போ போ போ
சோதிமிக்க மணியிலே காலத்தால்
சூழ்ந்த மாசு போன்றனை போ போ போ

தான் நேசிக்கின்ற பாரத மக்களின் சிறுமைகளைக் கண்டு பாரதி சீறுகிறார். நூற்றாண்டுகளாக அடிமை மயக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நமது மக்களை விழித்தெழுந்து சுதந்திர வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்படி வேண்டுகிறார். சுதந்திரத்திற்காகப் போராடும் வீறுகொண்ட மக்களை ஒரு மனிதனாகக் கற்பனை செய்து, அவனை வா, வா என்று வர வேற்கிறார்.

ஆழ்ந்த அடிமை மோகத்தில் ஆழ்ந்து கிடந்த மக்களை, விழித்தெழச்செய்து, அடிமைத்தனத்தை எதிர்த்துப் போராடச் செய்து, அவர்களுடைய உள்ளங்களில் மாபெரும் கிளர்ச்சியைத் தூண்ட வேண்டியிருந்தது. மக்கள் தன்னம்பிக்கை இழந்தவர்களாக இருந்தார்கள். பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிராக எதுவும் செய்ய முடியாதென்ற செயலூக்கமற்ற நிலைமையில் மூழ்கியிருந்தார்கள். இத்தகைய மக்களை வீர மூட்டி, உணர்ச்சிகொள்ளச் செய்து, அடிமைத்தனத்தை உதறித்தள்ளும் செயலில் ஈடுபடுத்தி, ஒன்றுபட்ட உணர்ச்சியுடைய ஒரு பெரும் விடுதலைப் படையை உருவாக்குவது,

அன்றைய நிலைமைகளில் எளிதான செயலன்று. பொது மக்களை உறக்கத்திலிருந்து எழுப்பி, சுதந்திர முரசின் ஒலி கேட்டுப் போர் வெறி கொள்ளச் செய்து, போர்முனைக்குச் செலுத்தும் கடமையைப் பாரதி மேற்கொண்டார்.

விடுதலையுணர்வின் தொடக்கத்தைப் பாரதி கண்டார். மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்தார்.

இத்தகைய உணர்வு நாட்டின் பல மொழிகள் பேசும் பகுதிகளிலும் தோன்றியது. அதனைப் பாரத நாட்டுக் கொடியினைப் புகழ்தல் என்ற கவிதையில் வருணித்தார்.

### நமது கொடி

கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர்—எங்கும்
    காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியரவ் வீரர்—தங்கள்
    நல்லுயி ரீந்தும் கொடியினைக் காப்பார் (தாயின்)

அணியணி யாயவர் நிற்கும்—இந்த
    ஆரியக் காட்சியோ ரானந்த மன்றோ!
பணிகள் பொருந்திய மார்பும்—விறல்
    பைந்திரு வோங்கும் வடிவமுங் காணீர்! (தாயின்)

செந்தமிழ் நாட்டுப் பொருநர்—கொடுந்
    தீக்கண் மறவர்கள் சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர்—தாயின்
    சேவடிக் கேபணி செய்திடு துளுவர்

கன்னடர் ஒட்டிய ரோடு—போரில்
    காலனும் அஞ்சக் கலக்கும் மராட்டர்
பொன்னகர்த் தேவர்க ளொப்ப—நிற்கும்
    பொற்புடை யாரிந்து ஸ்தானத்து மல்லர்

பூதல முற்றிடும் வரையும்—அறப்
    போர்விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
    மறைவரும் கீர்த்திகொள் ராஜபுத்ர வீரர்

பஞ்ச நதத்துப் பிறந்தோர்—முன்னைப்
    பார்த்தன் முதற்பலர் வாழ்ந்தநன் னாட்டார்
துஞ்சும் பொழுதினுந் தாயின்—பதத்
    தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும்

சேர்ந்ததைக் காப்பது காணீர்—அவர்
    சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!

தேர்ந்தவர் போற்றும் பாரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க! (தாயின்)

'இப்படையில் நான் ஒருவன்' என்ற பெருமித உணர்வை விடுதலைப்படை வீரர்களுக்கு ஊட்டினார்.

கோழைகளாக, அடிமை மயக்கத்தில் ஆழ்ந்து, அஞ்சி நடுங்குகிற மக்களை விடுதலை வீரர்களாக்கும் பணியை வ. உ. சிதம்பரனார் மேற்கொண்டார். பாரதி கவிதையில் போர் முரசு கொட்டினார். நூற்றாண்டுகளாகத் தன்னம்பிக்கை யிழந்து உறங்கிக்கிடந்த மக்களை, 'நம் நாட்டில், நமக்காக சுபிட்ச வாழ்வமைத்து வாழவேண்டும்' என்ற புத்துணர் வைப் பாரதி தூண்டினார். அதைச் செயலாக்கும் முயற்சியில் வ. உ. சி. ஈடுபட்டார். இம்மாபெரும் பணியை, சுதந்திரம் கிடைத்தபின் மதிப்பிடுவது அவ்வளவு எளிதன்று. 1908இல் இருந்த மக்கள் உணர்வு, நம்பிக்கைகளை அறிந்து மதிப் பிட்டால், எவ்வளவு பெரிய புரட்சிப் பணியை இவ்விரு தலைவர்களும் மேற்கொண்டார்கள் என்று தெரியும். பாரதி யும், வ. உ. சி.யும் மறக்கப்பட்டு வருகிறார்கள். பிரிவினை சக்திகளும், பிளவு சக்திகளும், வ. உ. சி. 'கப்பலோட்டிய தமிழர்' என்று பட்டம் சூட்டி, 'தமிழர்' என்ற சொல்லில் அழுத்தம் கொடுத்து, தங்கள் கருத்துக்கேற்ற சித்திரமாக அவரை ஆக்க முயலுகின்றன. பாரதியையோ, நேராக எதிர்க்க முடியாமல் மறைமுகமாகக் கூறி, பாரதியின் செல் வாக்கைக் குறைக்க முயலுகிறார்கள். இந்நிலையில் அவர் களது பிறந்தநாள் விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடு வதும், அவர்களது மாபெரும் செயல்களைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதும் அவசியமாகும்.

**குழந்தைப் பருவம்**

கருவிலே திருவுடையாராகச் சிதம்பரம் பிள்ளை பிறக்க வில்லை. பிராமணருக்கு அடுத்த உயர்ந்த சாதியான சைவ வேளாளர் சாதியில் பிறந்த எந்தச் சிறுவனையும் போலவே அவர் பிறந்து வளர்ந்தார். 1872ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் ஒட்டப்பிடாரம் என்ற கிராமத்தில் அவர் பிறந்தார். இக்கிராமம் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து ஒரு மைல் தொலை வில் உள்ளது.

இவ்வூர் கட்டபொம்மன் வெள்ளையரை எதிர்த்துப் போராடிய போர்க்களமாயிருந்தது. 1799இல் கட்டபொம்மு வீரப்போர் நிகழ்த்தித் தோற்றுப்போய், பிடிபட்டுத் தூக்கி

விடப்பட்டான். அவனுக்குப் பின், ஊமைத்துரை இடிபட்ட கோட்டையையும் கட்டி, போர்க்கொடி உயர்த்தி மீண்டும் போராடினான். ஆங்கிலேயரது ஆயுதபலம் கோட்டையைத் தரைமட்டமாக்கியது. ஊமைத்துரை மக்கள் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினான். அவன் கோட்டையைவிட்டு 1801இல் வெளியேறி, போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மருது சகோதரர்களோடு சேர்ந்து வெள்ளையர் ஆக்கிரமிப்புப் போரில் உயிர் நீத்தான். இப்போராட்டங்களில் விடுதலை வீரர்கள் தோல்வியடைந்த போதிலும், வெள்ளையரை எதிர்த்துப் போராடும் வீரவுணர்வை அது வளர்த்தது. வெள்ளையர் வெற்றி பெற்றுக் கோட்டையை அழித்து, விடுதலை வீரர்களில் பலரைத் தூக்கிலிட்டும், இன்னும் பலரை மனிதவாசமில்லாத தீவுகளுக்கு அனுப்பியும் கொடுமைகள் பல புரிந்தனர்.

இப்புத்துணர்வைப் போற்றி நாட்டுப் பாடல்களும் நாட்டுக் கதைகளும் எழுந்தன. அவை மக்கள் மனத்தில் வாழ்ந்தன. இப்பாடல்களைப் பாடக்கூடாதென வெள்ளையர் தடை விதித்தனர். தடையையும் மீறி நாட்டுப் பாடல்கள் நிலைத்த வாழ்வு பெற்றன. இப்பாடல்கள் எதிரொலிக்கும் பாஞ்சாலங்குறிச்சிக்கு அண்மையான ஓட்டப்பிடாரத்தில் வாழ்ந்த சிதம்பரம் பிள்ளை, சிறு வயதில் இப்பாடல்களைக் கேட்டு, அவற்றின் வீர உணர்வைக் கிரகித்துக் கொண்டார். கட்டபொம்மு, ஊமைத்துரை முதலிய வீரர் கதைகளில் ஈடுபாடு கொண்டார்.

அவர், வீரம் பெருமாள் அண்ணாவி என்ற பரம்பரை ஆசிரியர் நடத்திய திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தார். தொடக்கப் பள்ளியில் மரபுவழிக் கல்வி கற்றார். அப்பள்ளியில் படிப்பு முடித்ததும், அவருடைய தந்தையார் உலகநாத பிள்ளை அவருக்காக ஒரு நடுநிலைப் பள்ளியைத் தொடங்கினார். அங்கு தமது நண்பர்களோடு ஆங்கிலமும், மரபுவழிப் பாடங்களும் கற்றார். பிறகு இரண்டு ஆண்டுகள் தூத்துக்குடியில் ரோமன் கத்தோலிக்கத் துறவிகள் நடத்திய புனித சேவியர் பள்ளியில் சேர்ந்து கற்றார். பிற்காலத்தில் இந்த நகரம் அவரது தேசியப் புரட்சிப் போராட்டங்களுக்குக் களமாக இருந்தது.

தம் ஊரைச் சுயசரிதையில் குறிப்பிடும் பொழுது கட்டபொம்மன் ஊர் பாஞ்சையின் பக்கத்திலுள்ளது என்று வ. உ. சி. குறிப்பிடுகிறார்.

பள்ளிப் பருவத்தில் அவர் அதிகமாகக் கவனமோ, திறமையோ காட்டவில்லை. அவர் விளையாட்டுக்களில்

ஆர்வம் கொண்டிருந்தார். மரமேறுதல், தாண்டிக்குதித்தல், குதிரையேற்றம், குஸ்தி முதலிய முரட்டு விளையாட்டுக்களில் பயிற்சி பெற்றார். சில வேளைகளில் முரட்டுத்தனத்துக்காகத் தந்தையாரிடம் அடி வாங்கியதும் உண்டு. அடி வாங்கியும், மனம் மாறாத முரட்டு இளைஞராகவே அவர் வளர்ந்தார். இதனை அவர் தமது சுயசரிதையில் நகைச்சுவையோடு கூறுகிறார்.

பள்ளிப்படிப்பு முடிந்ததும், உலகநாத பிள்ளை தமது மகனுக்கு, தாலுகா ஆபீஸில் வேலை வாங்கித் தந்தார். தாலுகா அலுவலகக் குமாஸ்தாவுக்குப் பெரிய மதிப்பு இருந்த காலம் அது. ஏனெனில், அக்காலத்தில் இந்தியர்களுக்குக் கிடைக்கக்கூடிய மிகப் பெரிய வேலை தாசில்தார் வேலைதான். தாலுகா ஆபீஸ் குமாஸ்தாவாக 18 வயதில் நுழைந்தால் 40 வயதில் தாசில்தாராகிவிடலாம். நடுத்தர வர்க்கத்தின் லட்சியம் 'தாசில்' வேலைக்குத் தமது மகன் வரவேண்டும் என்பதே. உலகநாத பிள்ளை 'தாசில் வேலை' தன் மகனுக்குக் கிடைக்கவேண்டும் என்பதற்காக உள்ளூரிலேயே, தாலுகா அலுவலகத்தில் வேலை வாங்கிக் கொடுத்தார். சிதம்பரம் பிள்ளைக்குப் பிரிட்டிஷ் சேவகம் பிடிக்கவில்லை. பைல்கள் நடுவே பூச்சி போல ஊர்ந்து நடத்தும் வாழ்க்கையை வெறுத்தார். தந்தையின் ஆணைக்குக் கீழ்ப் படிந்து ஓர் ஆண்டு போய் வந்தார். அலுவலகக் குமாஸ்தாக்கள், தாசில்தார் இவர்களுடைய அடிமை மனப்பான்மையை அவர் வெறுத்தார். பிரிட்டிஷ் ஆதிக்கத்தைப் போராடி வீழ்த்தவேண்டிய கடமையுடைய இளைஞர்கள், பிரிட்டிஷ் ஆட்சி நீடிக்க அவர்களது பணிநிலையங்களில் பணிபுரிவது அவருக்குக் கசந்தது. அவர் தமது தந்தையாரை, வழக்கறிஞர் தொழிலுக்குப் பயிற்சி பெறத் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்ப வேண்டிக்கொண்டார். தந்தையாரும் வழக்கறிஞராதலால், மகனுடைய வேண்டுகோளை மறுக்கவில்லை. உலகநாத பிள்ளை அவரைக் கணபதி ஐயர், ஹரிஹர ஐயர் என்ற புகழ்பெற்ற வழக்கறிஞர்களிடம் பயிற்சி பெற அனுப்பி வைத்தார். பயிற்சிக் காலம் முடிந்து தேர்வு எழுதிய பின்னர் 'சன்னது' என்ற அனுமதியளிக்கப்பட்டது. ஒட்டபிடாரத்தில் வழக்கறிஞராகப் பணிபுரியத் தொடங்கினார்.

வழக்கறிஞராகப் பணிபுரியும்பொழுது உயர்ந்த ஒழுக்க முறைகளை அவர் தன் வாழ்க்கையில் கடைப்பிடித்தார். போலீசு அக்கிரமங்கள், பணக்காரர் ஏழைகளுக்குப் புரியும் அநீதிகள் ஆகியவற்றை எதிர்த்துப் பாதிக்கப்பட்ட ஏழைகளுக்காக இவர் நீதிமன்றங்களில் வாதாடினார். ஏழை

களின் துண்டு நிலங்களைப் படைபலத்தால் ஆக்கிரமித்துக் கொள்ளும் ஜமீன்தார்கள், தங்கள் மனம்போல நடக்காத ஏழை எளிய விவசாயிகளை அடியாட்களால் தாக்கும் பணக் காரர்கள் ஆகியோர்மீது போலீசார் வழக்குத் தொடராத போது, அவர்களுக்காக, பணக்காரர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தும் பணியைச் சிதம்பரம் பிள்ளை செய்து வந்தார். சில சமயங்களில் தந்தை பணக்காரப் பிரதி வாதிக்கும், சிதம்பரம்பிள்ளை பணக்காரரால் ஏமாற்றப்பட்ட ஏழை வாதிக்கும் வாதாடியதுண்டு.

இந்த நடவடிக்கைகளால் பணக்காரர்களும் போலீசாரும் அவர் மீது வெறுப்புக் கொண்டார்கள். ஊழல் மலிந்த பிரிட்டிஷ் ஆட்சியின் போலீஸ் துறையினர் சிதம்பரம் பிள்ளையை ஏதாவது ஒரு வழக்கில் தொடர்புபடுத்தச் சமயம் பார்த்திருந்தனர். ஒரு தலைமைக் கான்ஸ்டபிள் கொலை செய்யப்பட்டார். அந்த வழக்கில், சிதம்பரம் பிள்ளையைத் தொடர்புபடுத்தினர். அதனை விசாரித்த ஆங்கிலேய ஜாயின்ட் மாஜிஸ்டிரேட்டு, வழக்கில் எதிரிகள் அனைவரையும் விடுதலை செய்து, பொய் வழக்குப் போட்டதால், எதிரிகளுக்குச் செலவுத் தொகை கொடுக்கவும் தீர்ப்பளித்தார். வெள்ளை மாஜிஸ்டி ரேட்டுகூடக் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கத் துணியவில்லை.

மூன்று சப்மாஜிஸ்டிரேட்டுகள் மீது லஞ்ச ஊழல், கடமை தவறியது ஆகிய குற்றச்சாட்டுகளைப் பொது மக்கள் கொண்டு வந்தனர். சிதம்பரம் பிள்ளைதான் அஞ்சா நெஞ்சி னர் என்ற நம்பிக்கையோடு அவரை அவர்கள் தங்களுக்காக வாதாட அழைத்தனர். தற்காலத்திலேயே அதிகாரிகள் மீது வழக்குக் கொண்டுவர மக்கள் அஞ்சுகிறார்கள். அதற்கு வாதாட வழக்கறிஞர்கள் முன்வருவதும் அரிது. ஆனால் 80 ஆண்டுகளுக்கு முன் அதிகாரிகளின் செல்வாக்கு அபரிமிதமா யிருந்தது. சிதம்பரம் பிள்ளை அதிகாரிகளின் ஊழல் நட வடிக்கைகளை எதிர்த்துப் போராடியிருந்ததால், மக்கள் நம்பிக்கையைப் பெற்றிருந்தார். வழக்குகள் நடந்தன. மூன்று அதிகாரிகளில் ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். இருவர் குமாஸ்தாக்களாகப் பதவிக் குறைப்புச் செய்யப்பட்ட னர். இந்த வழக்குக் காரணமாக அதிகார வர்க்கம் முழுவதும் சிதம்பரம் பிள்ளை என்ற பெயரைக் கேட்டாலே அஞ்சி நடுங்கி யது. ஆயினும், அவர் மீது வெறுப்புக்கொண்டு ஏதாவது வழக்கில் மாட்டிவைக்கச் சந்தர்ப்பம் பார்த்திருந்த போலீசா ரோடு சேர்ந்து அவரது கழுத்தை நெரிக்கக் காத்திருந்தனர். திறமை மிக்க தைரியமுள்ள வக்கீல் என்ற புகழ் பரவியதால் அவரது தொழில்முறை நடவடிக்கைகள் அதிகமாயின.

அவரது தொழிலை விரிந்த அளவில் நடத்தக் கிராமமான ஒட்டப்பிடாரத்திலிருந்து, பல கோர்ட்டுகள் உள்ள தூத்துக் குடிக்குச் சென்று வாழத் தொடங்கினார். தமது தொழில் நட வடிக்கைகளுக்கு வாய்ப்பளிக்கும் நகரம் தூத்துக்குடியே என்பதை அனுபவத்தில் கண்டார். இந்நகரில்தான், ஏழை எளிய மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துப் போராடிய இளம் வக்கீல் சிதம்பரம் பிள்ளை, இந்திய தேசிய இயக்கம் என்னும் மாபெரும் பிரளயத்தோடு தொடர்பு கொண்டார். அவருக்குத் திலகர், அரவிந்தர், கார்பார்டே, மூஞ்சே, மண்டயம் சீனிவாசாச்சாரியார் (பாரதியின் நண்பர்), பாரதியார் ஆகிய சுதேசிகளின் நட்பு வாய்த்தது ('சுதேசி' என்ற பெயர், வெள்ளைக்காரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஏளனமாக வைத்த பெயர். அதுவே மக்களால் பெருமைக்குரிய விருதாகப் பின்னர் வழங்கப்பட்டது. ஏளன மாக வைத்த பெயர், பெருமைக்குரியதாக ஆகிவிட்டது). தங்கள் வாழ்க்கையைச் சுதந்திரப் போராட்டத்திற்கும் நாட்டுப் பணிக்கும் அர்ப்பணித்த இப்பெரியார்களது நல்லுற வால், சிதம்பரம் பிள்ளை சிறந்த தேச பக்தராக வளர்ச்சி பெற்றார்.

வ.உ.சி. தனது தூத்துக்குடி வாழ்க்கையின்போது பெற்ற நண்பர்களைக் குறித்துப் பின்வருமாறு எழுதினார்:

> இவர்கள் எனது நண்பர்கள். இவர்களை நான் நேசிக்கிறேன், மதிக்கிறேன். ஏனெனில் இவர்களுடன் எனக்குக் கருத்தொற்றுமை இருக்கிறது. இவர்களுடைய இலட்சியங்களை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இவர்கள் தங்கள் வாழ்க்கையை நாட்டுப் பணிக்காக அர்ப்பணித் துள்ளார்கள். அவர்களைப் போலவே நானும் பணிபுரிய விரும்புகிறேன்.

சிதம்பரம் பிள்ளை, பாளையங்கோட்டை சண்முகம் பிள்ளை என்பவரின் உதவியுடன் பத்திரிக்கை ஒன்றை நடத்தி னார். அதன் பெயர் 'விவேகபானு'. இதன் பொருள் அறிவுக் கதிர் என்பது.

தமிழன்பர்கள் பலரோடு சேர்ந்து அவர் திருக்குறள், சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கிய நூல்களையும், தொல்காப்பியம் என்ற பழமையான இலக்கண நூலையும் ஆழ்ந்து கற்றார். அரசியல் பேச்சுக் களில், இலக்கிய ரசனையுடன் கவர்ச்சிகரமாகப் பேசும் வல்லமை அவருக்கு வாய்த்தது. காவியங்களில் இருந்து மேற் கோள் காட்டாமல் அவர் அரசியல் பிரசாரம் செய்ததில்லை.

இதனால் பாமரரையும் பண்டிதரையும் ஒருங்கே கவர்ந்தார்.

**பொது வாழ்வு**

வ.உ.சி. ஏழைகளது நியாயத்துக்காகப் போராடுகிற வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கினார். பிறகு பிரிட்டிஷ் ஆட்சியே, ஏழைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்குக் காரணம் என்பதை உணர்ந்து, போலீசையும், அதிகாரிகளில் ஊழல்காரர்களையும் எதிர்த்தார். பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியையே எதிர்க்கும் இயக்கத்தோடு ஒன்றினார். பிரிட்டிஷ் ஆட்சியையே ஒழிப்பதற்காக மக்களைத் திரட்ட வேண்டும் என்ற திலகர் கொள்கையைக் கடைப்பிடித்துப் பல துறை இயக்கங்களில் ஈடுபடலானார். அவரது பணிகள் விரிவடைந்தன.

மூன்று இயக்கங்களில் அவர் கவனம் செலுத்தினார். அவை கூட்டுறவு இயக்கம், தொழிலாளர் இயக்கம், சுதேசி இயக்கம் என்பவை.

தூத்துக்குடியில் 'சுதேசிப் பண்டசாலை' என்ற பெயரில் சுதேசிப் பொருள்களை வாங்கி விற்பனை செய்யும் நிறுவனத்தை அமைத்தார். ஒரு நூற்பாலையைக் கட்டி வேலை தொடங்கினார். 'சென்னை விவசாய சங்கம்' என்றதோர் அமைப்பையும் தோற்றுவித்தார். இவற்றின் நோக்கம் சுதேசி இயக்கத்தை வலுவாக வளர்ப்பதாகும். இது அந்நியப் பொருள் வணிகத்தைக் குறைத்துப் படிப்படியாக ஒழிப்பதற்கான அடிப்படையாகும்.

இவற்றின் பொது நோக்கம் தொழிலாளி, விவசாயி, நடுத்தர வர்க்கத்தார் ஆகியவர்களிடையே, நம்பிக்கையை வளர்த்து, தேசிய இயக்கம் என்னும் பிரதான வெள்ளத்தில், இந்த நீரோடைகளைச் சங்கமிக்கச் செய்வதாகும். இந் நிறுவனம் ஒவ்வொன்றும் தேசிய இயக்கத்தின் பயிற்சிப் பள்ளிகளாகப் பணிபுரிந்தன.

'சென்னை விவசாய சங்கத்தின்' நோக்க அறிக்கையில் கீழ்வரும் வரிகள் காணப்பட்டன:

1 தொழிலாளர், விவசாயிகளது வாழ்க்கைத் தரத்தை மேம்பாடடையச் செய்வது.

2 தொழிலிலும் விவசாயத்திலும், நவீன விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி, அவற்றை வளர்ப்பது.

3 நமது மாணவர்களுக்காக சுதேசியத் தொழிற் பள்ளிகள் ஆரம்பித்துப் பயிற்சியளிப்பது.

4 தரிசு நிலங்களை எல்லா மாவட்டங்களிலும் விலைக்கு வாங்கி, விவசாயிகளையும் விவசாயத் தொழிலாளர் களையும் நவீன விஞ்ஞான முறைகளில் பயிற்சி யளித்து, அவற்றைப் பண்படுத்தி, விவசாய வளர்ச்சிக் குத் தொண்டாற்றுவது.

இந்நோக்கங்கள், நமது பொதுமக்களை ஒற்றுமைப் படுத்தி, செயல்படுத்தி, சுதேசி, சுயராஜ்யம், போராட்டம் என்ற மூன்று அம்ச இயக்கங்களில் ஈடுபட வைப்பவை. 'சுதேசி பிரச்சார சபை'யின் கிளையொன்று பிற்காலத் தொழிற்சங்கத் தலைவர் வி. சக்கரைச் செட்டியாரின் முயற்சியில் அமைக்கப் பட்டது.

சுதேசி இயக்கத்தின் நோக்கங்களுக்குட்பட்டு, 'சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' என்ற ஒரு கப்பல் போக்குவரத்து நிறுவனம் அமைக்க சிதம்பரம் பிள்ளை முற்பட்டார். இந் நிறுவனம் இரண்டு கப்பல்களைக் குத்தகைக்கு எடுத்தோ, விலைக்கு வாங்கியோ கடலில் ஓடவிடுவதெனத் தீர்மானித்தது. இக்கப்பல்களைத் தொடக்கத்தில் உள் நாட்டுக் கடற்கரை வாணிகத்திலும், இலங்கை இந்தியப் போக்குவரத்திலும் ஈடுபடுத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

## சுதேசிக் கப்பல் கம்பெனி

இந்திய நாட்டுக் கடற்கரை வணிகம் முழுவதும் பிரிட்டிஷ் கம்பெனிகள் கையில் இருந்தது. முதல் சுதேசிக் கப்பல் கம்பெனியை வ. உ. சி. தொடங்கியதும் அவர்கள் தங்கள் வணிகம் போய்விடும் என்று கலக்கமடைந்தார்கள். ஏராள மான கப்பல்களைச் சொந்தமாகக் கொண்ட பிரிட்டிஷ் ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி என்ற வெள்ளையர் நிறுவனம் கிழக்குக் கடற்கரையிலிருந்து இலங்கை, ரங்கூன், மலாசியா நாடு களுக்குக் கப்பல்கள் விட்டது. சுதேசிக் கப்பல்களின் பொரு ளாதாரப் போட்டிக்காகப் பிரிட்டிஷ் கம்பெனிகள் அஞ்ச, அதனால் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனிக்கு லாபம் கிடைத்தது. பல சுதேசி நிறுவனங்கள் முளைத்துப் பெரிதாகிச் சுதேசி இயக்கத்தின் தாக்கத்தால் பிரிட்டிஷ் கப்பல் போக்குவரத்துத் தொழிலே அழிந்துவிடும் என்று அவர்கள் பயந்தார்கள். இந்தப் பயத்திற்கு உண்மையான அடிப்படை உண்டு.

சுதேசிக் கப்பல் கம்பெனிக்குக் கப்பல்கள் கிடையாது என்று வதந்திகள் கிளப்பிவிடப்பட்டன. வ. உ. சி. பம்பாய்க்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு திலகரின்

உதவியால் ஒரு கப்பலை ஏற்பாடு செய்தார். அது இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே சரக்கு ஏற்றிச் சென்றது. பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி, சரக்குக் கட்டண விகிதத்தைக் குறைத்தது; பயணிகளின் கட்டணத்தையும் குறைத்தது. ஆயினும் இந்திய வணிகர்கள் அதிகக் கட்டணம் கொடுத்தாவது சுதேசிக் கப்பலில் பயணம் செய்யவும், சரக்கு அனுப்பவுமே விரும்பினார்கள். பின் பிரிட்டிஷ் கப்பல் நிறுவனம் ஒரு பொய் வழக்கைச் சுதேசிக் கப்பல் மீது தொடர்ந்தது. சுதேசிக் கப்பல், தங்கள் கப்பலின் மீது மோத வந்ததாகப் புகார் செய்தது. ஆங்கிலேய மாஜிஸ்டிரேட் திருப்தியடையும்படிகூட வழக்கை நிரூபிக்க முடியவில்லை. எல்லா முயற்சிகளிலும் பிரிட்டிஷ் நிறுவனம் தோல்வியடைந்தது.

பின்னர் சிதம்பரம் பிள்ளை, இரண்டு கப்பல்களை பம்பாயிலிருந்து ஒப்பந்தம் செய்தார். காலியா, லாவோஸ் என்ற பெயர்களுடைய கப்பல்கள் அவை. பிரிட்டிஷ் நிறுவனம், சுதேசிக் கப்பல் நிறுவனத்தை அழித்துவிடுவதற்கு எந்த அநியாயமான வழியையும் கடைப்பிடிக்கத் தயங்கவில்லை. அவற்றைச் சிதம்பரம் பிள்ளை பொதுக் கூட்டங்களில் விளக்கினார். மக்களின் ஆதரவைத் திரட்டினார். சதிகள் எதுவும் பலிக்காமல் போகவே நேரடியாகத் தலையிடும்படி ஆட்சியின் அதிகாரவர்க்கத்தைப் பிரிட்டிஷ் கப்பல் நிறுவனம் வேண்டிக் கொண்டது. சுதேசி நிறுவனத்தைச் சட்டங்களின் துணையோடு அடக்கும்படியும் வ. உ. சி.யைச் சிறைக்கு அனுப்பும்படியும் கேட்டுக்கொண்டது.

பெருந்தடைகளைச் சமாளித்து அரசாங்கத்தின் எதிர்ப்பையும் மீறிக் கப்பல் நிறுவனத்தை நடத்த வேண்டியிருக்கிறது என்ற நெருக்கடி நிலையை அறிந்த சுதேசி நிறுவனத்தின் பங்குதாரர்கள் சிதம்பரம் பிள்ளையை அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகிக்கொள்ளும்படி வற்புறுத்தினார்கள். அவர்கள் சுதேசி உணர்வைப் பயன்படுத்திப் பெரும் லாபம் சம்பாதிக்கும் ஆசையோடு சுதேசிக் கப்பல் நிறுவனத்தில் முதலீடு செய்திருந்தார்கள். கப்பல் நிறுவனம், அரசியல் நெருக்கடிக்குள்ளாவதைக் கண்டு பதறினார்கள். அரசியலையும் வணிகத்தையும் பிரிக்க வேண்டுமென்று யோசனை சொன்னார்கள். சிதம்பரம் பிள்ளை இதற்குச் சம்மதிப்பாரா? கம்பெனி நடத்தியதே அவரது அரசியல் திட்டத்தின் ஒரு பகுதிதானே! சுதேசியம், சுயராஜ்யத்திற்கு ஒரு பாதை என்றுதானே இம் முயற்சியில் அவர் ஈடுபட்டார். அவர் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைச் சுமுகமாக நடக்க விட்டுப் பிரிட்டிஷ்

அரசு கையைக் கட்டிக்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கும் என்று நம்பினாரா? பணம் போட்டவர்களின் நோக்கம் வேறு. அவர்களது குறிக்கோள் லாபம். வ. உ. சி.யின் குறிக் கோள், இந்திய மக்களின் நம்பிக்கையையும் சுதேசிப் பற்றையும் வளர்த்து, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடு படுத்துவது.

அந்த நோக்கத்துக்கு முரணாகக் கம்பெனிப் பங்குதாரர் கள், அவரைச் செயலாளர் பதவியிலிருந்து விலகி, சம்பளம் வாங்கும் ஏஜென்டாக இருக்க ஒப்புக்கொள்ளும்படி கோரி னார்கள். அவர்களது நன்றி கெட்ட தன்மையை வ.உ.சி. புரிந்து கொண்டு, அவர்களது கோரிக்கையை நிராகரித்தார். ஆனால், அவருடைய நண்பர்கள் ஏஜென்டுப் பதவியை ஒப்புக்கொள்ளும் படியும், அது சுதேசி இயக்க நோக்கங்களுக்கு இடையூறாக இருக்குமானால் சில மாதங்கள் கழித்துப் பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாமென்றும் சொன்னார்கள். நண்பர் களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு ஏஜென்டு பதவியை ஏற்றுக் கொண்டார். கம்பெனி நிர்வாகம் அவரைத் தூத்துக்குடிக்கு வெளியே பல நாட்கள் தங்கும்படி செய்தது. அவர் தூத்துக்குடியில் இல்லாத சமயத்தில் தம்முடைய சொந்த ஆதிக்கத்தை முதலாளிகள் அதிகரித்துக்கொள்ள முயன்றார் கள். அது தவிர, தூத்துக்குடிக்கு வெளியே பல நாட்கள் தங்கினால் சிதம்பரம் பிள்ளையால் அரசியல் வாழ்க்கையில் பங்கு கொள்ள முடியாது போய்விடும்.

**அரசியல் வாழ்க்கை**

பங்குதாரர்களிடம் சம்பளம் வாங்கும் ஊழியனாக எவ் வளவு நாள் வ. உ. சி. யால் உழைக்க முடியும்? லாபம் தவிர நோக்கமொன்றுமில்லாத சுரண்டல்காரர்கள் கப்பல் கம்பெனி நடவடிக்கைகளை, பிரிட்டிஷ் எதிர்ப்புப் போராட்டத்தின் ஓர் அம்சமாக நடத்துவதை விரும்பவில்லை. எனவே வ. உ. சி. தானே முயன்று கம்பெனிக்கு இடையூறு வரும் போதெல்லாம் தியாகங்கள் செய்து, சூதுகளையும் வஞ்சகங் களையும் பொது மக்களிடம் வெளிப்படுத்தி—கண் போலக் காத்து வந்த கம்பெனியிலிருந்து ராஜினாமாச் செய்தார். ஏஜெண்டு என்ற கைவிலங்கை முறித்துவிட்டு, முழுமூச்சோடு அரசியல் வெள்ளத்தில் குதித்தார்.

அவர் சுதேசிக் கம்பெனியிலிருந்து ராஜிநாமாச் செய்த பிறகு நிறுவனத்தின் நிலைமை மோசமானது. சில மாதங் களுக்குப் பிறகு, பாரதியாரின் யோசனைப்படி மறுபடியும்

ஏஜெண்டாகப் பணிபுரிய ஒப்புக் கொண்டார். பங்கு தாரர்கள் தங்கள் நிபந்தனைகளை வற்புறுத்தவில்லை. இவர் விலகியிருந்த காலத்தில் பிரிட்டிஷ் கம்பெனியின் கப்பல் களில் பொருளேற்றிய பல இந்திய முதலாளிகளை மறுபடி யும் சுதேசிக் கம்பெனியின் கப்பல்களில் பொருளேற்றும் படி வேண்டிக் கொண்டார். அவர்களும் அதற்கிணங்கி னார்கள்.

அவர் கம்பெனியிலிருந்து விலகிவிட்டதையறிந்து பெரு மகிழ்ச்சி கொண்டிருந்த பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியின் நிர்வாகிகள், மீண்டும் அவர் பொறுப்பேற்றுக் கொண்டார் என்பதையறிந்து, கம்பெனியையும் அவரையும் ஒழித்துவிடத் திட்டமிட்டார்கள். அதற்கொரு வாய்ப்பும் கிட்டியது.

பிபின் சந்திர பாலர் என்னும் வங்காள நாட்டின் தலைவர் வங்காளப் பிரிவினையை எதிர்த்து நடந்த கிளர்ச்சியில் மக்களுக்குத் தலைமை தாங்கியதால், சிறையில் அடைக்கப் பட்டிருந்தார். அவரை விடுதலை செய்தார்கள். அவரது விடுதலையை 1908ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் சிறப்பாகக் கொண்டாட தூத்துக்குடியிலும் வேறு பல நகரங்களிலும் வ. உ. சி. ஏற்பாடு செய்தார்.

பணத்தாசை பிடித்த டைரக்டர்களுக்கும் பங்குதாரர் களுக்கும், சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி, வியாபாரத்திற்கு மட்டும் தோற்றுவிக்கப்பட்டதல்ல, அரசியல் மாற்றத்தின் கருவியாகவும் அது செயல்படவேண்டுமென்று வ. உ. சி. எழுதினார்.

மார்ச்சு 9 கொண்டாட்டத்தினால் எழுச்சி பெற்ற மக்களைத் தலைமை தாங்கி வழி நடத்துவதில் எத்தகைய தொல்லை வந்தாலும் ஏற்றுக்கொள்வதென வ. உ. சி. தீர் மானித்தார். கம்பெனி டைரக்டர்களின் எதிர்ப்பையோ, வெள்ளை அதிகாரிகளின் பயமுறுத்தலையோ கண்டு அவர் தயங்கவில்லை.

சுறுசுறுப்பாக மார்ச்சு 9ஆம் நாளைக் கொண்டாடத் தயாரிப்புகள் நடந்தன. மார்ச்சு 9 திருநெல்வேலியில் கொண் டாடப்பட்டது. பத்தாயிரம் மக்கள் தாமிரவருணி பாலத் தடியில் கூடினர். தங்கள் அருமைத் தலைவர்கள் சிதம்பரம் பிள்ளையையும் சுப்பிரமணிய சிவாவையும் கேட்க அவர்கள் திரண்டிருந்தனர்.

**சிவா—அரசியல் சன்னியாசி**

சிவா சன்னியாசி உடையில் இருந்த அரசியல் தலைவர். அவர் ஒரு பிரிட்டிஷ் கம்பெனியில் பார்த்து வந்த வேலையை

உதறியெறிந்துவிட்டுத் தமிழ்நாட்டில் பல நகரங்களுக்கும் சென்று, தேச பக்தர்களைச் சந்தித்து, உதிரியாகக் கிடக்கும் அவர்களை ஒரே பெருவெள்ளமாகச் செயல்படத் தூண்டினார். விடுதலை இலட்சியத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவர். இந்திய மக்களிடம் பேரன்பு கொண்டவர். அவரது இலக்கியத் திறமை அவர் நடத்திய 'ஞானபானு' மூலம் வெளியானது. அவரது பேச்சுத்திறனைத் தேச விடுதலை இயக்கத்திற்கு அர்ப்பணித்தார். அவரது திறமைகள் அனைத்தையும் தேசிய விடுதலை இயக்கம் தனக்கென்றே கவர்ந்து கொண்டது. அவருக்கு இணை சிதம்பரம் பிள்ளைதான். இருவரும் இணைந்து சுதேசி இயக்கத்தை வளர்த்தனர்.

விடுதலை முழக்கம் வானில் எதிரொலித்தது. வந்தே மாதரம் என்ற முழக்கம் வெள்ளையரைக் கண்டு அஞ்சிய கோழைகளையும், வீரர்களாக்கியது. அந்நிய நாட்டு உடை உடுத்தவர்களை மக்கள் ஏளனமாகக் கருதினர். சலவை செய்வோர் அந்நியத் துணிகளைச் சலவை செய்ய மறுத்தனர். பிரிட்டிஷ் கப்பல்களில் சரக்கு அனுப்பியவர்களின் துணிகளை அவர்கள் துவைக்க மறுத்தனர். நாட்டில் பிரிட்டிஷ்காரர்களை ஆதரிப்பவர்களுக்குச் சவரம் செய்வோர் உடன்படவில்லை. பிரிட்டிஷ் கப்பல் கம்பெனியின் வக்கீல், சிதம்பரம்பிள்ளையைக் குறைவாகப் பேசியதைக் கேட்ட நாவிதர் அவருக்குப் பாதிச் சவரம் செய்து அப்படியே விட்டுவிட்டார். வண்டிக்காரர்கள் வெள்ளையர்களை ஆதரித்தவர்களைத் தமது வண்டிகளில் ஏறவிடவில்லை. வ. உ. சி. யின் சொற்கள் மக்களுக்கு ஆணையாயிற்று. தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்கள், தொழிற்சங்கம் அமைத்துத் தங்கள் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகவும் தேச விடுதலைக்காகவும் வேலை நிறுத்தம் செய்தனர். வ. உ. சி. அவர்களது சங்கத்திற்குத் தலைவர்.

இந்த உணர்ச்சி மிக்க நிலையில் திருநெல்வேலியில் மார்ச் 9 இல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சிதம்பரம் பிள்ளையும் சிவாவும் பிபின் சந்திரபாலர் விடுதலையை வரவேற்றுப் பேசினார்கள். கூட்டம் அமைதியாக நடந்து கலைந்தது. அதிகாரிகள் மக்களது விடுதலையார்வத்தைக் கண்டு கூட்டத்தைக் கலைக்க முயலவில்லை. அதிகார முறையில் கூட்டம் தடை செய்யப்படவில்லை. சிதம்பரம் பிள்ளையை அழைத்து மார்ச் 9 கூட்டங்களிலும் ஊர்வலங்களிலும் கலந்து கொள்ளக் கூடாது என்று தூத்துக்குடி மாஜிஸ்டிரேட் வாய்ச் சொல்லால் எச்சரித்திருந்தார். அவ்வாறு எழுதிக் கொடுக்க அவர் மறுத்து விட்டார்.

**விஞ்சும் வ. உ. சி. யும்**

கலெக்டர் விஞ்சு தன்னைச் சந்திக்குமாறு சிதம்பரம் பிள்ளைக்கும் சிவாவுக்கும் ஆணையனுப்பினார். இச்சந்திப்பு 1908, மார்ச் 12இல் நடைபெற்றது. இந்தச் சந்திப்பு பற்றிய ஆதாரங்கள் எதுவும் இப்பொழுது கிடைக்கவில்லை. சந்திப்பு நடந்தவுடன் பாரதியார் விஞ்சு பயமுறுத்தியதாகவும், அப் பயமுறுத்தலுக்கு அஞ்சாமல் வ. உ. சி. பதிலளித்ததாகவும் இரு கவிதைகள் எழுதி வெளியிட்டார். அவை மக்களது விடு தலையுணர்வைச் சுவாலை விட்டெரியச் செய்தன. ஏறக்குறைய பாரதி பாடிய முறையில்தான் விஞ்சுதுரைக்கும் சிதம்பரம் பிள்ளைக்கும் இடையே உரையாடல் நிகழ்ந்திருக்க வேண்டும்.

ஏகாதிபத்தியவாதிகளின் அதிகார வர்க்க மனப்பான்மை யையும் அவர்களது விருப்பங்களையும் அதனை எதிர்க்கும் விடுதலை ஆர்வலர்களது உணர்ச்சியையும் இப்பாடல்கள் சித்தரிக்கின்றன.

கோழைப்பட்ட மக்கள், ஏழைப்பட்ட மக்கள், தொண் டொன்றே தொழிலாகக் கொண்டோர், அடிமைப் பேடிகள் இந்நிலையிலேயே மக்கள் இருத்தல் வேண்டும் என்பது ஏகாதி பத்தியவாதிகளின் விருப்பம்.

நாட்டிலெங்கும் சுதந்திர வாஞ்சையை மூட்டினாய், வந்தேமாதரமென்று கோசித்தாய், உண்மைகள் கூறி, 'சட்டம் மீறி' அடிமைப் பேடிகளை மனிதர்கள் ஆக்கினாய், கண்ட கண்ட தொழில் கற்க மார்க்கங்கள் காட்டினாய், எங்கும் சுயராஜ்ய விருப்பத்தை ஏவினாய் என்பன, விஞ்சின் குற்றச்சாட்டுகள். இவை பிரிட்டிஷ் சட்டப்படியே குற்றங்கள் அல்ல. அடிமை மக்களை விழிப்படையச் செய்து, விடுதலை விருப்பத்தை அவர்கள் மனதில் தூண்டியதே விஞ்சிற்குக் குற்றமாகப்படுகிறது.

ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தை எதிர்த்து இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்காகக் கப்பலோட்டியது மாபெருங் குற்றம்.

வ.உ.சி. பதிலில் விஞ்சு குற்றமெனக் கூறும் கருத்துக் களைத் தங்கள் உரிமைகள் என வலியுறுத்திக் கூறுகிறார். வந்தேமாதரம் என்று கோஷித்தல், வெள்ளையரைத் தூசிப் பதன்று; எந்தம் ஆருயிர் அன்னையைப் போற்றுதல்; ஆனால் 'நாங்களும் மனிதர்கள்' என்று உணருவது; மனித வாழ்க்கைக் குரிய உரிமைகளை விரும்புவது குற்றமல்ல என்று சிதம்பரம் பிள்ளை கூறுகிறார். பல பல தொழில்கள் செய்து எங்கள்

மிடிமையைத் தீர்ப்பது குற்றமல்ல; ஒற்றுமை வழியே எங்கள் வழி என்று தேர்ந்திட்டோம்; இனி உங்கள் கொடுமைக் கெல்லாம் மலைவுறோம் என்ற உறுதி பிறந்துவிட்டது.

இறுதியாக, விஞ்சின் மிரட்டல்களுக்குத் தேச பக்தன் பணியவில்லை. அவனது தேசபக்தி, மிரட்டல்களுக்கு அஞ்சாதவனாக அவனை மாற்றிவிட்டது.

சதையைத் துண்டுதுண் டாக்கினும் உன்னெண்ணம்
சாயுமோ?—ஜீவன்—ஓயுமோ?
இதயத் துள்ளே இலங்கு மகாபக்தி
ஏகுமோ?—நெஞ்சம்—வேகுமோ?

என்று வீரமுழக்கம் செய்கிறான் தேசபக்தன்.

இவ்விரண்டு பாடல்களில் நாட்டுமக்களின் மனப்போக்குகள் மாறியுள்ளதைப் பாரதி சித்தரிக்கிறார். மாறிய உணர்ச்சி நிலையில் மக்கள் துப்பாக்கிக்கும் சிறைக்கும் அஞ்சவில்லை. அறிவு, துணிவையும் வீரத்தையும் விளைவிக்கிறது.

விஞ்சு ஓராண்டு நன்னடத்தை ஜாமீன் கேட்கிறான். சிதம்பரமும் சிவாவும் அவனது கோரிக்கைக்கு இணங்க மறுக்கிறார்கள். அதற்கிணங்காவிட்டால் மாவட்டத்திற்கு வெளியே சென்று வசிக்கும்படி கூறுகிறான். அதற்கும் இவர்கள் இணங்கவில்லை. விஞ்சு அவர்களை ஜாமீன் காலமாகிய ஓராண்டு பாளையங்கோட்டை மத்திய சிறையில் வசிக்கும்படி உத்தரவிடுகிறான்.

### தீ பரவுகிறது

நெல்லையில் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த செய்தி நகர் முழுவதும் பரவியது. தேசபக்தர்கள் சிறை புகுந்ததை நெல்லை நகர மக்கள் அறிந்ததும் வெகுண்டெழுந்தார்கள். விஞ்சின் வரம்பு மீறிய செயலை, வேலை நிறுத்தங்கள், கோபாவேச ஊர்வலங்கள் மூலம் கண்டனம் செய்தார்கள். பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடந்தன. போலீசார் மக்களின் மனத்தில் பயமூட்டுவதற்காக, நகரை வலம் வந்தார்கள். மக்கள் ஆவேசங்கொண்டு, அவர்களை லைனுக்குச் செல்லுமாறு விரட்டினார்கள். பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் அறிகுறிகள் அனைத்தும் அவர்களது கோபத்திற்கு இலக்காயின. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடி இறக்கப்பட்டு, தீ வைக்கப்பட்டது. போலீஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. தாலுகா அலுவலகம், கலெக்டர் அலுவலகம், நகர்மன்ற அலுவலகம் முதலியன தீக்கிரையாயின. கலெக்டரும் போலீஸ் சூபரின்

டெண்டும் உதவிக் கலெக்டரும் சம்பவங்கள் நடந்த இடங்களுக்கு விரைந்து வந்தனர்.

உதவிக் கலெக்டர் ஆஷ் தனது கைத்துப்பாக்கியினால் கூட்டத்தை நோக்கிச் சுட்டான். 17 வயதுச் சிறுவன் ஒருவனும் மற்றும் மூன்று இளைஞர்களும் குண்டுகளுக்குப் பலியானார்கள். ஆஷ் சுட்டுப் பலியான மனிதர்களை மக்கள் தூக்கிச் சென்றுவிட்டார்கள். மக்கள் வெள்ளையதிகாரிகளைக் குறிவைத்துக் கல்லெறிந்தார்கள். விஞ்சிற்கு மண்டையில் காயம் ஏற்பட்டது. விசேஷ போலீஸ்காரரைக் கலகத்தை அடக்குவதற்காக விஞ்சு அழைத்தான்.

இதனைத் தொடர்ந்து போலீசார் தச்சநல்லூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய நகரங்களைச் சேர்ந்த பலபேர் மீது வழக்குத் தொடுத்தனர். சிதம்பரம் பிள்ளையும் சிவாவும் கைது செய்யப்பட்ட பின்னர் நடந்த நிகழ்ச்சிகளுக்கும் அவர்களையே பொறுப்பாக்கி வழக்குத் தொடரப்பட்டது.

**விசாரணை**

சிதம்பரம் பிள்ளை மீது இ.பி.கோ. 123ஏ செக்ஷன்படியும் 153ஏ செக்ஷன்படியும் குற்றம் சாட்டப்பட்டது. சிவாவிற்குத் தங்க இடம் கொடுத்தது, அவருக்கு ஆதரவளித்தது ஆகிய குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டன. திருநெல்வேலி அடிஷனல் மாவட்ட மாஜிஸ்டிரேட்டு வாலஸ் வழக்கை விசாரித்தார். அரசாங்கத் தரப்பில் ரகசியப் போலீசார் அறிக்கைகளும் தலைவர்களுடைய பேச்சுக்களின் பகுதிகளும் சாட்சியமாகக் காட்டப்பட்டன. அரசியல் குற்றச்சாட்டுகளை, அரசியல் முறையிலேயே தலைவர்கள் மறுத்தனர். குற்றச்சாட்டுகளை அவர்கள் மறுக்கவில்லை. கைதிக் கூண்டில் நின்று அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் மீது குற்றம் சாட்டினர்.

என். கே. ராமசாமி ஐயர் எதிரிகளுக்காக வாதாடினார். ஸ்ரீநிவாசாச்சாரி, சடகோபாச்சாரி, நரசிம்மாச்சாரி, சீனிவாசன் முதலிய வழக்கறிஞர்கள் சிவாவுக்கும் சிதம்பரம் பிள்ளைக்குமாக வாதாடினார்கள். பாண்டிச்சேரியில் வசித்து வந்த மண்டயம் ஸ்ரீனிவாசாச்சாரியாரும் பாரதியாரும் வழக்கறிஞர்களை அமர்த்தினார்கள். பாரதியார் விசாரணைச் செய்திகளை நாடு முழுவதும் பரப்பினார். வ.உ.சி.யின் அறிக்கைகளை அச்சடித்து நூலாக வெளியிட்டார். தினசரிகளில் செய்தி வெளியிட ஏற்பாடு செய்தார்.

பூர்வாங்க விசாரணை முடிந்து, வழக்கு செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பப்பட்டது. நூற்றுக்கணக்கான

மரியாதைக்குரிய சாட்சிகள் வழக்கில் சாட்சிகளாக வந்தனர். அவர்களுள் பாரதியாரும் ஒருவர். ஆனால் அரசாங்கமோ, போலீஸ் அதிகாரிகளையும் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி ஊழியர்களையுமே சாட்சிகளாகக் கொண்டுவர முடிந்தது. விசாரணைச் செய்திகள் இந்தியா முழுவதும் பரவியது. 'யுகாந்தர்' என்ற வங்காளி நாளேடு விசாரணை நடவடிக்கை களைத் தினந்தோறும் வெளியிட்டது.

**தீர்ப்பு**

ஜுலை 7ஆம் நாள் நீதிபதி பின்கே தீர்ப்பை வாசித்தார். சிதம்பரம் பிள்ளைக்கு ராஜத் துரோகத்திற்காக 20 ஆண்டு களும் அரசியல் குற்றவாளியான சிவாவிற்கு இடமளித்ததற் காக 20 ஆண்டுகளும் தண்டனையளித்தார். சிவாவிற்கு 10 ஆண்டுகள் தண்டனை விதித்தார்.

**பொது மக்கள் எதிர்ப்பு**

சிதம்பரம் பிள்ளைக்கு அப்பொழுது 35 வயது. தந்தையார் உயிர் வாழ்ந்திருந்தார். மனைவியும் இச்செய்திகேட்டு மூளைக் குழப்பமடைந்து, சாகும்வரை பைத்தியமாகவே வாழ்ந்தார். தந்தையும் தாயும் தீர்ப்பு நாளில் 20 ஆண்டுகள் வயது முதிர்ந்தவர்களாகக் காணப்பட்டனர்.

இத்தீர்ப்பு வெளிவந்த வாரத்தில் பாலகங்காதர திலகர் ஆறு ஆண்டு சிறைவாசமும் பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டார். இத்தண்டனை திலகருடைய ஏடான கேஸரியில் ராஜத்துவேஷத்தன்மை கொண்ட ஒரு கட்டுரை எழுதியதற்காக அளிக்கப்பட்டது.

வ.உ.சி.க்கு வழங்கப்பட்ட கடுமையான தண்டனை குறித்து 'பெங்காளி' என்ற ஏடு கீழ்க்கண்டவாறு எழுதியது:

> ஒரு நாகரிக ஆட்சி, பின்கேயின் அரசியல் இலட்சியங் களை ஏற்க மறுக்கும் நாள் மிக நல்ல நாளாகும். சுதேசிக் குறிக்கோளுக்காகப் பணிபுரிவது குற்றமென்றால் இந்திய மக்கள் முப்பது கோடிப்பேரும் குற்றவாளிகளே.

'அம்ருத்பஸார்' ஏடு எழுதியது:

> விடுதலை வேட்கையை வெளியிட்டதற்கு இரண்டு ஆயுள் தண்டனைகள்!

> ஸ்ரீ பிள்ளையைத் தவிர வேறு யாருக்கும் இந்த அநீதி இழைக்கப்படவில்லை. நமது தேசிய வீரரின் தியாகத் தின் முன் நாம் தலை வணங்குகிறோம். விடுதலை பெற

வேண்டும் என்ற விருப்பமே ஜட்ஜ் பின்கேயின் நோக்கில் குற்றமாகிவிட்டது.

பாரதியார் சென்னையில் இருந்து வெளியிட்ட இந்தியா வில் தீர்ப்பைக் கண்டித்து எழுதினார். இந்தியா பத்திரிகை அரசாங்க உத்திரவால் மூடப்பட்டது. நமது மாபெரும் கவிஞர் பாண்டிச்சேரிக்குச் சென்று வாழ வேண்டியதாயிற்று. தமது அரசியல் வாழ்க்கையைத் தொடரப் பிரெஞ்சுப் பகுதி யான பாண்டிச்சேரிக்குச் சென்று வசிப்பது தவிர வேறு வழியில்லை. நிறுத்தப்பட்ட இந்தியாவை, பகீரத முயற்சி செய்து வெளியிடுவதில் தேசபக்தக் குழுவும் பாரதியாரும் வெற்றியடைந்தனர்.

இங்கிலாந்தில் இந்திய அமைச்சராக இருந்த மார்லி பிரபு, இந்திய வைஸ்ராயாக இருந்த மன்றோ பிரபுவிற்கு எழுதினார்:

> தூத்துக்குடி மனிதர்களுக்கு அளித்திருக்கும் தண்ட னையை ஏற்றுக் கொள்ள முடியாது. அடுத்த தபாலில் தீர்ப்பு எனக்கும் கிடைக்கும். இத்தகைய முட்டாள் தனமான தீர்ப்பை நான் ஆதரிக்க முடியாது. இத்தகைய முட்டாள்தனங்களையும், தவறுகளையும் திருத்துவதற்கு முயற்சி செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன். அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டியதுதான். ஆனால் குற்றத்திற்கு மிக அதிகமான தண்டனையால் அமைதியும் ஒழுங்கும் நிலைப்பதற்குப் பதில், நமது நீதித் துறையி லேயே மக்களுக்கு நம்பிக்கை போய்விடும்.

அப்பீலில், தண்டனை 6 ஆண்டுகளாகக் குறைக்கப் பட்டது. ஆனால் நீதிபதிகள், பின்கேயின் அரசியல் கருத்துக் களுக்கு ஆதரவு தெரிவித்தனர். தண்டனையை மட்டும் குறைத்தனர்.

உயர்நீதி மன்றத்தின் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் பின் வருமாறு குறிப்பிட்டனர்:

> பிள்ளையின் வாழ்க்கையின் அரசியல் நோக்கம், ஆங்கிலேயர்களை இந்திய அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றுவதாகும். இந்நோக்கத்தை மறைக்கவே அவருடைய மற்ற நடவடிக்கைகள் இருந்தன. அவர் ஒரு ராஜத்துரோகி என்ற பின்கேயின் கருத்தை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

உயர் நீதிமன்றமும் பிள்ளையின் அரசியலை ஒப்புக் கொண்டது. ஆனால் மக்களின் சார்பில் பாரதி, வ.உ.சி.க்கு

வாழ்த்துக் கூறினார். 'சிறைபுகுந்த சிதம்பரம் பிள்ளை தமிழகத்தார் மன்னன் என மீள்வார்' என்ற நம்பிக்கையைத் தமிழக மக்களுக்கு உண்டாக்குகிறார். சிதம்பரம் பிள்ளை சிறையில் இருக்கும்பொழுது, அவரது அரசியல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தத் தமிழகத்தார் உறுதி கொள்ளவேண்டும் என்று பாரதியார் விரும்புகிறார்.

வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ
வருந்தலைஎன் கேண்மைக் கோவே!
தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவேம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி,
வாளாண்மை நின் துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி!

தலைவர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனையைக் கேட்டுச் சோர்ந்துபோன மக்களுக்கு உற்சாகம் உண்டாக்குவதற்குப் பாரதி 'மீண்டும் சீக்கிரம் வருவார்' என்ற நம்பிக்கையூட்டுகிறார். 'நாங்கள் நீ போட்டிருந்த திட்டங்களை நீயில்லாத போதும் நிறைவேற்றுவோம்' என்று மக்கள் சார்பில் நின்று வாக்குறுதியளிக்கிறார். வ.உ.சி. சிறையில் இறைவனுக்குத் தவங்கள் ஆற்றி வரங்கள் பெற வேண்டுகிறார். வெளியிலுள்ள தம் துணைவர்கள் வாளாண்மை (வாள் வீரம்) பெற வேண்டுமென விரும்பித் தவம் இயற்றித் திரும்பவேண்டுமென பாரதி வாழ்த்துகிறார். இப்பாட்டில் சோகம் இல்லை. வ.உ.சி. சிறை வாழ்க்கையைக்கூட மக்கள் அரசியல் உணர்வு தாழாமல் பாதுகாக்கப் பயன்படுத்துகிறார் பாரதியார்.

அவரது சிறை வாழ்க்கையைத் தமது சுய சரிதத்தில் சிதம்பரம் பிள்ளை வருணிக்கிறார். பின்கே, தமது தீர்ப்பைப் படித்தவுடன் எதிரிகளில் சிதம்பரம் பிள்ளையையும் சிவாவையும் தவிர அனைவரையும் கோர்ட்டிலிருந்து மூன்று மைல்களுக்கப்பாலிருந்த பாளையங்கோட்டை மத்திய சிறைக்குப் போலீஸ் பாதுக்காப்போடு நடத்திக் கொண்டு சென்றனர். தலைவர்களிருவரும் ஒரு குதிரை வண்டியில் சென்றனர்.

அவர்கள் சிறைபுகும் நாளில் திருநெல்வேலியில் மக்கள் கொதித்தெழுந்து தங்கள் எதிர்ப்பை வன்முறையில் வெளியிட்டனர். மார்ச்சு 12இல் நடைபெற்ற செயல்களைவிட வீரமிக்க செயல்கள் ஜூலை 7, 8 நாள்களில் நிகழ்ந்தன. இம்முறை விஞ்சு கூட்டத்தை நோக்கிச் சுட்டான். பலர் உயிரிழந்தனர். சிதம்பரனாரின் நண்பர்கள் தூத்துக்குடிக்குத் திரும்பினர்.

அங்கே பிள்ளையின் ஆதரவாளர்கள் பெருங்கூட்டமாகச் செய்தி தெரிந்துகொள்ளக் கூடினர். ஆயிரக்கணக்கானவர் கூடியதால், அதுவே பொதுக்கூட்டமாக மாறியது. ஆஷ் என்ற உதவிக் கலெக்டர் கூட்டத்தைக் கலையுமாறு உத்தரவிட்டான். கூட்டத்திலிருந்த மக்கள் கலையமுடியாதென உறுதியாக மறுத்தனர். அவன் கூட்டத்தைத் தடி கொண்டு தாக்கப் போலீசாருக்கு உத்தரவிட்டான். போலீஸ் படை தடிகளைச் சுழற்றிக் கொண்டு கூட்டத்தைத் தாக்கியது. தேசிய உணர்வு கொண்ட மக்கள் திருப்பித் தாக்கினர். குதிரை மீது ஏறியிருந்த ஆஷ் துரையை அவர்கள் கீழே இழுத்தெறிந்து மிதித்தும் உதைத்தும் இழிவுபடுத்தினர். போலீசாரும் கோபங் கொண்ட மக்கள் முன்னால் நிற்க முடியாமல் அடியும் கல்லெறியும் பட்டு ஓடினர்.

சிறையிலிருந்த தலைவர்கள் தங்களுக்கு ஆதரவாக விடுதலையுணர்வு கொண்ட மக்களது செயல்களை அமைதியான திருப்தியோடு கேள்விப்பட்டனர். சிறையில் பணிபுரிந்த ஓர் ஆங்கிலேய ஜெயிலர், தேசத் தலைவர்களை அவமானப்படுத்தும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொண்டான். யார் யாரெல்லாம் சிதம்பரனாருக்கு உணவு அனுப்பினார்களோ அவர்களையெல்லாம் சிறைக்குள் தள்ளினான். அவருக்கு உணவு கிடைக்காமல் செய்தான். அப்படியும் சிறைக்கு அஞ்சாத பலர், அவருக்கு உணவளிக்க முன் வந்தனர்.

சிறையில் சுகாதார வசதிகளும் பிற வசதிகளும் சராசரி மனித வாழ்க்கை நடத்தவே போதுமானதாக இல்லை. அவர்கள் நேரத்தை இலக்கியம் கற்பதிலும் உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் மனுக்கள் எழுதுவதிலும் நண்பர்களுக்கும் வீட்டிற்கும் கடிதங்கள் எழுதுவதிலும் எஞ்சிய நேரத்தைச் சீட்டாடுவதிலும் கழித்தார்கள். சிறையில் கிரிமினல் கைதிகளுக்கு அப்பீல் மனுக்கள் எழுதிக் கொடுத்தும் அவர்களைச் சட்ட விரோதமாகச் சிறை அதிகாரிகள் அடித்து உதைக்கும்பொழுது அதைக் கண்டித்துக் கோஷங்கள் எழுப்பியும் உதவியதால் அவர்களுடைய அன்பையும், ஆதரவையும் அரசியல் கைதிகள் முழுமையாகப் பெற்றிருந்தார்கள்.

சிறை நிர்வாகத்தையே சிதம்பரம் பிள்ளையின் யோசனை கேட்காமல் நடத்த முடியாதென்ற நிலைமை அதிகாரிகளுக்கு ஏற்பட்டது.

அவர்கள் அவரை வேறு சிறைக்கு மாற்றும்படி வேண்டிக் கொண்டனர். வ.உ.சி. கோவைச் சிறைக்கு மாற்றப் பட்டார். ரயிலில் அவரைக் கோவைக்குக் கொண்டு

சென்றனர். வழியெல்லாம் ரயில் நிலையங்களில் மக்கள் கூட்டம் திரண்டது. அவரை அவர்கள் வாழ்த்தி விடை கொடுத்தனர். அவர் எதற்காகச் சிறைத் தண்டனை பெற்றாரோ, அந்நோக்கங்களுக்காகத் தாங்கள் பாடுபடப் போவதாக உறுதியளித்தனர். கோவையில், விஞ்செல் என்ற ஒரு ஜெயிலர் இருந்தான். அவன் நிறத்திமிர் கொண்டு சுதேசிகள் மீது வெறுப்புக் கொண்ட மனிதன். அவன் சிதம்பரம் பிள்ளைக்கும் அவரது சுதேசி நண்பர்களுக்கும் பல தொந்தரவுகளையும் இடையூறுகளையும் விளைவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தான். சுதேசி இயக்கம் அழிந்து போய்விட்டது, தடியடி கொடுத்தது போன்ற செய்திகளைப் பரப்புவான். பத்திரிகைகள் சிறைவாசிகளுக்குக் கொடுக்கப் படுவதில்லை.

சிவாவின் வழக்கில் தண்டனையடைந்த நண்பர்கள் சேலத்திற்கு மாற்றப்பட்டார்கள். வ. உ. சி. தனிமையாகக் கோவைச் சிறையில் விடப்பட்டார். அவரை ஜெயிலர் செக்கிழுக்க உத்திரவிட்டான். தவறி விழுந்தாலோ, கால் ஓய்ந்து நின்று விட்டாலோ, சவுக்கால் அடிப்பான். அச் செய்தி பிற சிறைவாசிகளுக்குப் பரவியது. சிறைவாசிகளுக்குத் தேவையானவை அன்பான சொல்லும் புன்னகையும்தான். கசப்பு உமிழ்ந்து பேசுகிற அதிகாரிகளின் சொற்களைக் கேட்டு மனம் குன்றிப் போயிருக்கும் சிறைவாசிகளுக்கு ஆதரவான சொல்லும் அன்பான புன்னகையும் அமுதம் போன்றவை. அதோடு அவர்களுடைய அப்பீல் மனுக்களையும் அவர் எழுதிக் கொடுப்பார். எனவே, சிறைவாசிகள் அனைவரும் அவரை நேசித்தார்கள். அவருக்காக எதுவும் செய்யத் தயாராயிருந் தார்கள். ஒரு நாள் அவர்கள் விஞ்செல்லை கழிவோடைக்குள் தள்ளிக் கம்பளியால் மூடி அடித்துவிட்டார்கள். யார் அடித் தார்கள் என்று அவனால் அடையாளம் காணமுடிய வில்லை.

கோவைச் சிறையில் இருந்தபோதுதான் ஆஷ் கொலை செய்யப்பட்ட செய்தி வந்தது. ஆஷ் மூன்று இந்திய இளைஞர் களைக் கொன்றுவிட்டான் என்ற செய்தியறிந்ததும் வாஞ்சி நாதன் என்ற இளைஞன் அவனைக் கொல்லுவேன் என்று சபதம் செய்து கொண்டான். தேச விடுதலைக்காக வன் முறையைப் பயன்படுத்துவது தவறில்லை என்ற கருத்துக் கொண்ட இளைஞர் அணியில் சேர்ந்து பயிற்சி பெற்றான். ஒரு கைத்துப்பாக்கியையும் அவர்களிடமிருந்து அவன் பெற் றிருந்தான். விஞ்சிற்குப் பிறகு ஆஷ் கலெக்டரானான். இவன் எங்கோ செல்வதற்காகத் தன் மனைவியோடு ரயிலேறிச்

சென்றபோது மணியாச்சியில் ரயில் நின்றது. வாஞ்சிநாதன் அவனையே பின்பற்றி வந்து, அவனைச் சுட்டுக் கொன்று வஞ்சம் தீர்த்துக் கொண்டான். போலீசார் கையில் அகப்பட விரும்பாமல், கழிப்பிடத்திற்குள் நுழைந்து தன்னைத்தானே சுட்டுக் கொண்டு இறந்தான்.

சிறை டாக்டர், சிதம்பரம் பிள்ளையின் நண்பர். வெள்ளையர்களுக்குத் தெரியாமல் அவரோடு உரையாடுவார். அவர்தான் ஆஷ் கொலையுண்ட செய்தியையும் வாஞ்சிநாதன் தற்கொலை செய்து கொண்ட செய்தியையும் வ. உ. சி.க்குக் கூறினார். "இந் நற்செய்தியை வரவேற்கிறேன்" என்று வ. உ. சி. மகிழ்ச்சியோடு கூறினார்.

இரண்டாண்டுகள் கோவைச் சிறையில் இருந்த பின்னர் அவர் 1912 டிசம்பர் மாதம் விடுதலையானார்.

அவர் விடுதலையாவதற்கு முன்னர் சுதேசிக் கப்பல் கம்பெனியின் முதலாளித்துவ டைரக்டர்கள், அக்கம்பெனியைப் பல சாகசங்களால் அழிக்கவும் வ. உ. சிதம்பரம் பிள்ளையைச் சிறைக்கனுப்பவும் முயன்று வெற்றி கண்ட பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கே விற்றுவிட்டார்கள். இச் செய்தி அவர் மனத்தில் பெருங்கவலையை ஏற்படுத்தியது. இவ்வதிர்ச்சியிலிருந்து விடுபட அவருக்குப் பல ஆண்டுகள் ஆயின.

1908லிருந்து 1912 வரை நான்கு ஆண்டுகளில் புரட்சி இயக்கத்தில் ஒரு தேக்கம் ஏற்பட்டது. சிதம்பரம் பிள்ளை சிறைக்குச் செல்லும்போது அவரை வழியனுப்பியது ஒரு மாபெருங்கூட்டம். அவரது தண்டனையைக் கண்டித்து எழுச்சி மிக்க எதிர்ப்பியக்கம் நடைபெற்றது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் கோவைச் சிறைக்கு மாற்றப்பட்டுக் கொண்டு செல்லப்படும்பொழுது உற்சாகமிக்க கூட்டங்கள் ரயில் நிலையம்தோறும் வழியனுப்பியது.

ஆனால், டிசம்பர் 1912இல் நிலைமை மாறிவிட்டது. தொடர்ச்சியான இயக்கம் மக்கள் உணர்வு நிலைமையைத் தாழாமல் வைத்திருக்கவில்லை. நாலாண்டுக்கு முன் இருந்த உணர்ச்சி நிலை காட்டு வெள்ளம்போல வற்றிவிட்டது. தலைமையைப் பிரிந்த அவை சீர்குலைந்தன. பிரிட்டிஷ் கொடுமைகளை எதிர்க்கத் தலைமை தாங்கும் அணித் தலைமை சிறைக்குள் அடைக்கப்பட்டுவிட்டது.

பாரதியார் எதிர்பார்த்ததுபோல, "வேளாளன் சிறை புகுந்தான்; தமிழகத்தார் மன்னன் என மீள்வான்" என்ற வாக்குப் பொய்த்துப் போய் விட்டது. அவரைச் சிறை வாயிலில் வரவேற்கக் காத்திருந்தவர் ஒரே ஒருவர்தான். அது

அவரது விசுவாசமிக்கப் போராட்டத் தோழர் சிவாதான். சேலம் சிறையில் அவருக்குப் பெரும் வியாதி கண்டதால் விடுதலை செய்துவிட்டார்கள். அவர் சேலம் மாவட்டத்தில் சுதேசி இயக்கத்தில் பல இன்னல்களை ஏற்றுச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். அவரைச் சிறை வாயிலில் வரவேற்க வந்தவர் அவர் ஒருவர்தான்.

மனஞ்சோர்ந்துவிடாமல் அவர் சென்னையில் தங்கினார். அங்கு தன்னைப் போலவே ஊக்கத்தோடு தேசப்பணியிலும், தொழிற் சங்கப் பணியிலும் ஈடுபட்டிருந்த சக்கரைச் செட்டியார், சிங்காரவேலு செட்டியார். இன்னும் அணையாத புரட்சிக் கனலாக ஒளிர்ந்து கொண்டிருந்த பாரதியார் ஆகியவர்களோடு தொடர்பு கொண்டார். தமது செல்வ மனைத்தையும் நாட்டுப் பணிபுரியும் தொண்டர்களுக்காகவே செலவிட்ட மண்டயம் ஸ்ரீனிவாசாச்சாரியார் சென்னையில் தான் வாழ்ந்து வந்தார். அவருடைய பண உதவியும் கிடைத்தது. வ. உ. சி. தமது கோரல் மில் தொழிற்சங்க அனுபவத்தைப் பயன்படுத்திக்கொண்டு தொழிற்சங்கத் தலைவர்களோடு சேர்ந்து பணிபுரிந்தார். சென்னைத் தொழிலாளர் சங்கம் (M.L.U.) மற்றும் பல தொழிற்சங்கங்களை அமைப்பதில் அவர்களுக்குத் துணைபுரிந்தார். தமது கூட்டுறவு இயக்க அனுபவத்தைப் பயன்படுத்தி, சென்னையில் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தார். ஏழை எளிய மக்களையும் கூட்டுறவு இயக்கத்தில் சேரச் செய்தார்.

அவருக்கு வருமானம் எதுவுமில்லை. வழக்கறிஞராகத் தொழில் புரிய முடியாதபடி சன்னது பறிமுதல் செய்யப் பட்டிருந்தது. பல வழிகளில் உலக வாழ்க்கையை நீந்த முயன்றார். மளிகைக் கடை வைத்துப் பார்த்தார். வெற்றி பெறவில்லை. மண்ணெண்ணெய்க் கடை வைத்தார். அதிலும் இழப்பு.

இவரை ஒருமுறை விடுதலை செய்த வாலஸ் என்பவர் உயர் நீதிமன்ற நீதிபதியாயிருந்தார். சன்னதைத் திரும்பத் தருமாறு அவருக்கு விண்ணப்பித்தார். வாலஸ் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு, சன்னதைத் திருப்பிக் கொடுத்து வழக்கறிஞராகப் பணிபுரிய அனுமதித்தார்.

சென்னையில் சில ஆண்டுகள் தங்கியிருக்கும்பொழுது வையாபுரிப் பிள்ளை, செல்வ கேசவராய முதலியார், பாரதியார், உ. வே. சாமிநாதய்யர் முதலிய தமிழ்ப் புலவர்களோடு அடிக்கடி இலக்கிய ஆய்வுகள் நடத்துவார். அக்காலத்தில் சில பண்டைய நூல்களை இவர் பதிப்பித்தார். திருக்குறள் அறத்து பாலை ஆய்வுரையோடு பதிப்பித்தார்.

தத்துவ நூல்கள் சில எழுதினார். ஜேம்ஸ் ஆலன் என்ற அமெரிக்கத் தத்துவாசிரியரின் நூலை மொழிபெயர்த்தார்.

அவரது உடல்நிலை சிறை வாழ்க்கையின் கடுமையான சூழ்நிலையால் சீர்கேடடைந்தது. அரசியல் சூழ்நிலை அவர் சிறைக்குப் போகும்போது இருந்ததுபோல இல்லை. பழைய தலைவர்களின் செல்வாக்குக் குறைந்துவிட்டது. தேசிய இயக்கத்தின் தலைமையில் பொதுக் கொள்கைகள் உருவாகி வந்த காலம் அது. அவற்றில் பலவற்றைச் சிதம்பரம் பிள்ளை யால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அவர் எப்பொழுதும் விடுதலை இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு விரோதமாகச் செயல்படவில்லை. அவருக்கு உடன்பாடில் லாத விஷயங்களில்கூட விலகியிருப்பாரே தவிர எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை. தமது மனச்சாட்சியின் வழிகாட்டுதலைப் பின்பற்றித் தமது இறுதிக்காலம் வரை பயனுள்ள ஏதாவது அரசியல் பணி, இலக்கியப் பணி, சமூக சீர்திருத்தப் பணி இவற்றில் ஏதாவது ஒன்றில் ஈடுபட்டு வந்தார்.

கடைசி இருபத்தைந்து ஆண்டுகள் உடல் நலிந்த நிலைமை யில், அவர் இலக்கிய ஆய்விலும் வெளியீட்டிலும் நேரம் செல விட்டார். அவர் பண்டைய இலக்கியங்கள் தமிழ் மக்களது செல்வம் என்றும் அதை ரசிக்கும் வாய்ப்பு சாமானியத் தமிழ னுக்குக் கிட்டவேண்டும் என்றும் நம்பி வந்தார். அதற்காக அவற்றை எளிய நடையில் எழுதப்பட்ட உரையோடு வெளி யிட ஆர்வம் காட்டினார்.

திருக்குறளுக்கு உரையெழுதியவர்களில் பரிமேலழகர் உரை படித்த பண்டிதர் வியக்க எழுதப்பட்டது. மணக்குட வர் உரை, மக்கள் மொழிக்கு நெருக்கமான நடையில் நேரடி யான பொருள் கொண்டு எழுதப்பட்டது. மணக்குடவர் உரை யோடு சிதம்பரம் பிள்ளை திருக்குறளின் அறத்துப்பாலைப் பதிப்பித்தார். மணக்குடவர் உரையின் நடை கடினமாக இருக்கும் இடங்களில் எல்லாம் தனது உரையை எளிய நடை யில் எழுதினார். திருக்குறளை ஒவ்வொரு தமிழனும் படிக்க வேண்டும் என்ற பேரார்வத்தால் அவர் திருக்குறள் பதிப்பு வேலையை மேற்கொண்டார். 2000 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கிய தமிழ் நடை சாதாரணமாக, இலக்கியப் பயிற்சியில் லாத தமிழனுக்கு விளங்காது. ஆகையால், எளிய நடையில் இருந்த பழைய உரையை அடிப்படையாகக் கொண்டு நமது காலத்து மொழி நடை கலந்து உரை எழுதினார்.

இது போலவே தொல்காப்பியத்தைத் தமது உரையோடு பதிப்பித்தார். ஒழுக்க முறையில் மிக உயர்ந்த கருத்துக்கள் கொண்டவர் வ.உ.சி.

நெல்லை மாவட்டத்தில் வேளாளர் என்ற மிக உயர்ந்த சாதியில் பிறந்தவர் அவர். பிராமணர்களைவிடக் கட்டுப் பெட்டியான பழக்க வழக்கங்கள் உடைய சாதியினர் அவர்கள். இவர் தூத்துக்குடியில் அரசியலில் ஈடுபடும் பொழுது, கண்ணில்லாத தாழ்த்தப்பட்டவர்களைத் தம் வீட்டில் வளர்த்துக் கல்வி கற்பித்தார். பிற்காலத்தில் சகஜானந்தர் என்று துறவித் திருநாமம் பூண்ட தாழ்த்தப்பட்ட இளைஞருக்குச் சைவ சித்தாந்தமும் தமிழிலக்கியமும் கற்பித்து, மனம் துணிந்து வீட்டில் ஒருவராக ஏற்றுக்கொண்டார்.

இவரது இச்செயல்களுக்காக, அவர் சாதி நீக்கம் செய்யப் பட்டதுமுண்டு. தம் இனத்தில், உள்ள சாதிப் பித்தர்களின் வெறுப்புக்கு ஆளானாரே அன்றி, எல்லா இனத்தவர்களின் அபிமானத்துக்கும் ஆளானார். சிவா பிராமணர்; பூநூலை அறுத்தெறிந்து பிராமண கர்வத்தை விட்டொழித்தவர். இவருக்கு உதவியவர்களில் மண்டயம் ஸ்ரீனிவாசாச்சாரி யார் பிராமணர். வழக்கறிஞர்கள் பிராமணர்கள். இவர்கள் பிராமண குலத்தில் உதித்த தேசப்பற்றுமிக்க, சாதிக் கருவம் இல்லாத மேலோர்.

அவருடைய வக்கீல் சன்னது திரும்பக் கிடைத்ததும் கோவில்பட்டிக்குச் சென்று தொழில் தொடங்கினார். பணத் தாசை கொண்ட, அரசியல் கொள்கையற்ற பிராமண வழக்கறிஞர்கள், இவர் மீது பொறாமை கொண்டு அற்பத் தனங்களில் ஈடுபட்டார்கள். அவர் மனம் குன்றித் தம்முடைய அரசியல் வாழ்க்கையின் வேர்போல் இருந்த தூத்துக்குடிக்குச் சென்றார். தூத்துக்குடியில் வழக்கறிஞர்கள் வருமானம் அமோகமாக இல்லை. தமது ஓய்வை, இலக்கிய ஆய்விலும் தத்துவ ஆய்விலும் செலவழித்தார். தமது சுயசரிதையைச் செய்யுளில் எழுதினார். சில அரசியல் மாநாடுகளில் தலைமையுரை நிகழ்த்தினார்.

தமிழக அரசியல் வரலாற்றிற்கு அவர் ஆற்றிய சிறந்த பணிகள், தம்முடைய சுயசரிதையை எழுதி வெளியிட்டதும் பாரதியாருக்கும் அவருக்குமுள்ள உறவை 'பாரதியாரும் நானும்' என்ற கட்டுரையில் எழுதியதுமாகும். பார்த்தால் நூல்கள் 100 பக்கங்களுக்குள்தான் இருக்கும். ஆனால் அவற்றுள் தமிழக அரசியல் வரலாற்றின் துவக்க காலச் சிற்பிகளின் மன ஒற்றுமையும் நேசப்பான்மையும் புரட்சிகர மனப்பான்மையும் வெளியாகின்றன. 'பாரதியாரும் நானும்' என்ற கட்டுரை, சிதம்பரம் பிள்ளைக்கும், பாரதிக்குமுள்ள ஆன்ம நேயத்தைச் சித்தரிக்கிறது. அக்காலத்து மக்களின் சமுதாய உணர்வைத் தூண்டி வளர்த்த இரு பெருமக்களது தோழமை

யுணர்வினை வெளிப்படுத்துகிறது. இருவரும் ஒரு தோழமைக் குழுவின் யோசனைப்படியே தம்தம் கடமைகளை வகுத்துக் கொண்டு அரசியல் பணிபுரிந்தார்கள். சங்கடங்கள் நேர்ந்த போது இருவரும், பாண்டிச்சேரி, சென்னைக் குழுக்களைக் கலந்து கொண்டே, அவற்றிற்குத் தீர்வு கண்டார்கள். வ.உ.சி.யின் எல்லா தேசிய முயற்சிகளுக்கும், பாரதியின் இந்தியா முதலிய பல பத்திரிகைகளின் ஆதரவு உண்டு. அவ்வாறு ஆதரித்த காரணத்தாலேயே அவை பிரிட்டிஷ் அரசினால் அடக்கப்பட்டன.

வங்காளத்தில் தோன்றிய புரட்சித் தீயைத் தெற்கில் பரவச் செய்தவர்களில் பாரதியும் வ.உ.சி.யும் முக்கியமான வர்கள். அவர்களுடைய சுதேசிக் குழுவில் யாரும் முக்கியத் துவம் குறைந்தவர்களல்லர். ஆனால் அவர்களுள் செயல் வீரத் திலும் கவிதையால் மக்களுக்கு உணர்வூட்டுவதிலும் வ.உ.சி. யும் பாரதியும் இணையற்றவர்கள்.

அவர்கள், தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்று வித்து, வளர்த்தவர்கள். அரசியல், சமூகம், இலக்கியம் ஆகிய மூன்று துறைகளையும் இணைத்து மக்கள் சமூக உணர்வு நிலையை வளர்த்தார்கள். தொழிலாளரைத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளத் தொழிற் சங்க இயக்கத்தைத் தோற்றுவித்தார் வ.உ.சி. அவரது தமிழக மறுமலர்ச்சி இயக்கம் பரந்த அரசியல் பண்பாட்டுப் பின்னணி கொண்டது. அந்த வழியில் காலத்திற்கேற்ற முன்னேற்றம் காணவேண்டும்.

அவர் வாழ்க்கையின் இறுதி மணி நேரத்தை எப்படிக் கழித்தார் என்று அறிந்துகொள்ளுவது ஒரு சுவையான செய்தியாகும். பாரதியாரின் பாடல்கள் சிலவற்றை நல்ல குரலில் பாடுகிறவர் ஒருவர் பாடக் கேட்டுக்கொண்டே அவர் கடைசி மூச்சிழுத்தார். அவை ‘விடுதலைப் பாடல்’, ‘பாரத சமுதாயம்’ ஆகியன.

**விடுதலை விடுதலை விடுதலை**

பறைய ருக்கும் இங்கு தீயர்
புலைய ருக்கும் விடுதலை!
பரவ ரோடு குறவ ருக்கும்
மறவ ருக்கும் விடுதலை!
திறமை கொண்ட தீமை யற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞான மெய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே

ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை சாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே
வாழி கல்வி செல்வ மெய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒருநி கர்ச
மான மாக வாழ்வமே

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி லும்ந மக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வ மிந்த நாட்டிலே

விடுதலையின் உணர்வுகளைக் கற்பனையாக இப்பாடல் உணர்த்துகிறது. வெறும் கற்பனையைச் சொல்லாத இப் பாடல் விடுதலை யாருக்கெல்லாம் தேவை என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. பொதுவான சமத்துவம் நிறைந்த ஒரு பொருளாதார அமைப்புத் தேவை என்பதும் சுட்டிக்காட்டப் படுகிறது. சோசலிச அமைப்பு என்ற இந்திய அரசியல் அமைப்பைச் சொல்லால் அழைக்கவே, நமது கோடீசுவரர் களின் பத்திரிகைகள் எவ்வளவு எதிர்ப்பைக் கக்குகின்றன. 1921 செப்டம்பரில் எழுதிய பாட்டு, இத்தகைய கருத்துக் களைக் கொண்டிருப்பதே மிக முற்போக்கான ஒரு போக் காகும்.

### பாரத சமுதாயம்

பல்லவி

பாரத சமுதாயம் வாழ்கவே—வாழ்க வாழ்க!
பாரத சமுதாயம் வாழ்கவே—ஜய ஜய ஜய! (பாரத)

அனுபல்லவி

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக் கும்பொது வுடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்குஒரு புதுமை—வாழ்க! (பாரத)

சரணங்கள்

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ?—புலனில்
வாழ்க்கை இனியுண்டோ?—நம்மி லந்த
வாழ்க்கை இனியுண்டோ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெரு நாடு
கனியும் கிழங்கும் தானி யங்களும்
கணக்கின் றித் தரு நாடு—இது
கணக்கின் றித் தரு நாடு—நித்தநித்தம்
கணக்கின் றித் தரு நாடு—வாழ்க! (பாரத)

இனியொ ருவிதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொ ருவனுக் குணவிலை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்—வாழ்க! (பாரத)

'எல்லா உயிர்களி லும் நானே இருக்கின்றேன்'
என்றுரைத் தான்கண்ண பெருமான்;
எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—வாழ்க! (பாரத)

எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க! (பாரத)

விடுதலை, வருகின்ற புதிய பாரதம், அதற்காக நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய சபதம் அனைத்தும் அடங்கிய அவருடைய நெருங்கிய நண்பரான பாரதியின் பாடல்களைப் பல முறை விரும்பிப் பாடச் சொல்லிக் கேட்டுக்கொண்டே உயிர் பிரிந்தார். அப்போது அவருக்கு வயது 64. ○

இணைப்பு—1

# வ.உ.சி. நூல்கள்

## நூல்கள்

1 சுயசரிதை

2 வி.ஓ.சி. கண்ட பாரதி

3 வள்ளியம்மை சரித்திரம்

4 திருக்குறள் விருத்தி உரை

5 திருப்பொய்கையார் இன்னிலை உரை

6 பாடற்றிரட்டு

7 மெய்யறம்

8 மெய்யறிவு

## பதிப்பு

9 திருக்குறள் மணக்குடவர் உரை (விளக்கத்துடன்)

10 தொல்காப்பியம்: எழுத்து: இளம்பூரணம்

11 தொல்காப்பியம்: பொருள்: இளம்பூரணம்

## மொழிபெயர்ப்பு

12 மனம் போல வாழ்வு

13 சாந்திக்கு மார்க்கம்

14 அகமே புறம்

15 வலிமைக்கு மார்க்கம்.

# சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி (லிமிட்டெட்), தூத்துக்குடி

1 இந்தக் கம்பெனியானது 1882-ம் வூ௵த்து "இந்தியன் கம்பெனி ஆக்டு"ப்படி 1906-ம்வூ௵ அக்டோபர் மீ 16உயில் ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

2 இந்தக் கம்பெனிக்கு மூலதனம் ரூ. 10,00,000. இம் மூலதனம் பங்கு 1-க்கு ரூ. 25–0–0 வீதம் 40,000 பங்குகளாக இந்தியா, இலங்கை முதலிய ஆசியாக் கண்டத்துத் தேசத்தார் களிடமிருந்து சேர்க்கப்படும். மூலதனம் வேண்டும்போது அதிகரிக்கப்படும். பங்காளிகள் அவரவர்கள் பங்குத் தொகை மட்டில் உத்தரவாதிகள்.

3 இக்கம்பெனியின் உத்தியோகஸ்தர்கள்:-

### அக்கிராசனர்

ஸ்ரீமான். பொ. பாண்டித்துரைச்சாமித் தேவர் அவர்கள், பாலவநத்தம் ஜமீன்தார், இராமநாதபுரம், மதுரை.

### டயரெக்டர்கள்

1 மகா-ள-ள ஸ்ரீ பி. வெங்கிட்டராமாநுஜலு நாயுடுகாரு, பேங்கர், தூத்துக்குடி

2 ,, சி. விஜயராகவாச்சாரியாரவர்கள் பி.ஏ., வக்கீல், சேலம்

3 ,, ஏ. சுந்தர சாஸ்திரியாரவர்கள், பி.ஏ. பி. யல்., திருநெல்வேலி பாலம்

4 ,, என்.ஏ.வி. சோமசுந்தரம் பிள்ளையவர்கள், பி.ஏ.பி.எல்., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி பாலம்

5 ,, எம். டீ. தேவதாஸ் பிள்ளையவர்கள், பி. ஏ. பி. எல்., பாளையங்கோட்டை

6 ,, டி. எஸ். சுப்பிரமணிய பிள்ளையவர்கள், சேயர்மேன், சிவ தேவஸ்தானம் கமிட்டி, திருநெல்வேலி

7 மகா-ா-ா-ஸ்ரீ சி. சு. வ. கிருஷ்ண பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி

8 ,, அ.மு.ம. அருணாசலம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி

9 ,, அண்ணாசாமி ஐயரவர்கள், பிளீடர், தூத்துக்குடி

10 ,, சி. த. ஆ. ஆறுமுகம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி

11 ,, அ.சு.வே. வேலாயுதம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி

12 ,, வ. அ. ஆ. ஆதிநாறாயணஞ் செட்டியாரவர்கள், வியாபாரம், தூத்துக்குடி

13 ,, வ.அ.வெ.சு. வெங்கிடாசலஞ் செட்டியாரவர்கள், வியாபாரம், தூத்துக்குடி

14 ,, ந. சு. தெய்வநாயகம் பிள்ளையவர்கள், வியாபாரம், தூத்துக்குடி

15 ,, ஏ. சி. வ. திருச்சிற்றம்பலம் செட்டியாரவர்கள், வியாபாரம், தூத்துக்குடி

16 ,, ஏ.வி.ஆர்.ஏ. அடைக்கப்பச் செட்டியாரவர்கள், வியாபாரம், கொழும்பு

17 ,, ஏ. எம். சைய்யத் இப்ராகிம் அவர்கள், வியாபாரம், கொழும்பு

18 ,, A. சோலைமலைத் தேவரவர்கள், வியாபாரம், வைத்தீஸ்வரன்கோயில்

19 ,, திரு. நாராயண பிள்ளையவர்கள், கைவிழாஞ்சேரி, சீர்காழி

20 ,, K. சிதம்பரநாத முதலியாரவர்கள், கைவிழாஞ்சேரி, சீர்காழி

21 ,, M. T. K. முத்துசாமி செட்டியாரவர்கள், சீர்காழி

22 ,, டி. எஸ். குப்புசாமி பிள்ளையவர்கள், தாடாளன்கோவில், சீர்காழி

23 ,, D. அனுமந்த செட்டியாரவர்கள், சோமவார்பேட்டை, குடகு

24 ,, எஸ். இராமசாமி பிள்ளையவர்கள், கன்னப்பாடி (ரூவன்வாலா)

25 மகா-ா-ா-ஸ்ரீ A. அசனுசைன் இராவுத்தரவர்கள்,
திண்டுக்கல்

26 ,, சீனி அசனுசை இராவுத்தரவர்கள்,
இராமனாதபுரம்

27 ,, A. சோமசுந்தரம் அவர்கள், எம். ஏ.,
கூடலூர்

28 ,, W. ஸ்ரீநிவாச அய்யங்காரவர்கள்,
சென்னபட்டனம்

29 ,, அண்ணான் திருமலை அய்யரவர்கள்,
சேலம்

30 ,, பிட்டா இராமசாமி அய்யரவர்கள்,
சேலம்

31 ,, A. அருணாசலம் செட்டியாரவர்கள்,
சேலம்

**செக்ரெட்டேரிகள்**

,, எஸ். டீ. கிருஷ்ண அய்யங்காரவர்கள் பி. ஏ. பி. எல்., தூத்துக்குடி, கௌரவ காரியதரிசி

,, வ. உ. சி. சிதம்பரம் பிள்ளையவர்கள் தூத்துக்குடி, துணைக்காரியதரிசி.

**ஆடிட்டர்கள்**

,, பி. கே. இராமய்யரவர்கள், பி.ஏ.பி.யல். கௌரவ ஆடிட்டர், திருநெல்வேலி பாலம்.

4 கம்பேனியின் ரிஜிஸ்டரான ஆபீஸ் தற்காலம் தூத்துக்குடி பீச்சு ரோடு 4-ம் நிர் கட்டிடத்தில் அமைக்கப் பெற்றுள்ளது.

5 இக்கம்பேனி ஏற்படுத்தியதின் முக்கிய நோக்கங்கள்:-

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் மற்றும் சுதேசிய ஸ்டீமர்கள் நடைபெறாத துறைமுகங்கட்கும் பிராயாணத்தையும் வியாபாரத்தையும் சௌகரியப்படுத்தவும் சகாயப் படுத்தவும் தக்க ஸ்டீமர்கள் நடைபெறும்படி செய்தல், இந்தியர்களையும் இலங்கையர்களையும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களையும் கப்பல் நடாத்தும் தொழிலில் பழக்குவித்து அதன்மூலம் வரும் லாபத்தையடையும்படி செய்தல், இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களுக்கும் கப்பல் நடாத்துந் தொழிலையும்

கப்பல் நிர்மாணஞ்செய்யும் தொழிலையுஞ் செய்து காட்டிக் கற்பித்தல், இந்திய இலங்கை மாணவர்க்கும் மற்றும் ஆசியாக் கண்டத்து மாணவர்க்கும் கப்பலோட்டுந் தொழிலையும் கப்பல் நிர்மாணஞ் செய்யும் தொழிலையும் சாஸ்திர சம்பந்தமாகக் கற்பிக்கும் கலாசாலைகள் ஏற்படுத்தல், கப்பல் நடாத்துந் தொழிலிலும் வியாபார முறையிலும் இந்தியர்கள் இலங்கையர்கள் முதலிய ஆசியா கண்டவாசிகளுக்குள் ஐக்கிய பாவனையையுண்டுபண்ணி ஒற்றுமையாக உழைக்கச் செய்தல், பற்பல வியாபார ஸ்தலங்களிலுள்ள வியாபாரங்கட்கடுத்த கொள்வன கொடுப்பன தெரிந்து கொள்வதற்காக இந்தியா இலங்கை முதலிய ஆசியா கண்ட தேசத்தவர்களை ஏஜெண்டுகளாக நியமித்தல், ஸ்டீமர்கள், ஸ்டீம் லாஞ்சுகள், படகுகள் முதலியன நிர்மாணஞ் செய்வதற்கும் அவைகளைச் செப்பனிடுவதற்கும் சுத்தப்படுத்துவதற்கும், துறைகளேற்படுத்தல்; கம்பெனியார் தீர்மானிக்கும் சுதேசியக் கைத் தொழில்களையும் வியாபாரங்களையும் நடத்துதல் முதலியனவாம்.

6 தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் மற்றும் இந்திய துறைமுகங்கட்கும் பிரயாணமும் வியாபாரமும் அபிவிர்த்தியான நிலைமையிலிருப்பதால் கம்பெனியின் செலவும் ரிசர்வ் பண்டுக்கு வைத்துக் கொள்ளும் தொகையும் நீக்கி பெரியதோர் ஈவு கிடைக்குமாறு கணக்கிடப்பட்டிருக்கிறது.

7 100 பங்கு எடுக்கிற பங்காளிகள் டயரெக்டர்களாவதற்கு பாத்தியதையுடையவர்கள்; ஆனால் டயரெக்டர்கள் வருஷத்துக்கொரு தடவை பங்காளிகளின் ஆர்டினேரி மீட்டிங்கில் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

8 எடுக்கப்படும் பங்குகளின் மொத்தத் தொகையில் ஐந்திலொரு பங்குத்தொகை முன் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். பாக்கிப் பங்குத் தொகை கம்பேனியார் வேண்டுங் காலங்களில் செலுத்தப்படவேண்டும்.

9 கம்பேனியின் நன்மைக்காகவும், லாபத்துக்காகவும் பங்காளிகள், கம்பேனியின் ஸ்டீமர்களிலேயே பிரயாணமும், ஏற்றுமதி, இறக்குமதியும் செய்யவேண்டும்.

10 கம்பேனியின் பங்குகளை மற்ற சொத்துக்களைப் போல் அடமானம் கிரயஞ் செய்யலாம்; ஆனால் பணம் ஒரு பங்காளிக்கும் கம்பேனியிலிருந்து வாபஸ் கொடுக்கப்பட மாட்டாது.

11 கம்பேனிக்குக் கிடைக்கும் லாபத்தொகையில் கம்பேனிக்கு ரிசர்வ் பண்டாக வைத்துக் கொண்டது போக மீதத் தொகையைப் பங்காளிகளுக்கு அவர்கள் பங்கு வீதாசாரப்படி பகுந்து கொடுக்கப்படும்.

12 கம்பேனியின் விதிகளடங்கிய புத்தகமும், மிமோரண்டமும் அப்ளிக்கேஷன் பாரங்களும் தூத்துக்குடி கம்பேனி ஆபீசிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். விதிகளடங்கிய புத்தகம் மிமோரண்டம் இவைகளின் கிரயம் ரூ 0—8—0.

13 சகல கரஸ்பாண்டன்ஸ்களும், அப்ளிக்கேஷன்களும் மணியாடர்களும் தூத்துக்குடியிலிருக்கும் கம்பேனியில் செக்ரட்டேரி அல்லது அசிஸ்டெண்டு செக்ரட்டேரியர்களுக்கு அனுப்பவேண்டும்.

14 சுமார் 25,000 பங்குகள் வரை இதுவரை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்னும் அப்ளிக்கேஷன் விரைவாக வந்து கொண்டேயிருக்கின்றன. தேசாபிமானமுள்ள இந்தியா, இலங்கை முதலிய ஆசியா கண்டத்துத் தேச கனவான்கள் கம்பேனியில் அதிகப் பங்குகள் எடுத்துதவிபுரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

தூத்துக்குடி, எஸ். டி. கிருஷ்ணய்யங்கார்,
24-9-07. கௌரவ காரியதரிசி

# நாளேடுகளில் செய்திகள்

**சுதேசியமும் வ. உ. சி.யும்**

நாம் அன்னிய நாட்டுச் சாமான்கள் வாங்குதலாகிய கொடிய செய்கையை முற்றிலும் விலக்கி, ஜாஸ்தி விலை கொடுத்தாகிலும் சுதேசிய சாமான்களையே வாங்க வேண்டு மென்றும், இவ்விதமாய் நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து நம்முடைய கைத்தொழிலை ஆதரித்தாற்றான் நாம் தற்காலம் நஷ்டத்திற்குட்பட்ட போதிலும் பிற்பாடு மிகுந்த இலாபத் திற்குள்ளாவோமென்றும், இவ்விதந்தான், ஜெர்மனி அமெரிக்கா, ஜப்பான் இவை போன்ற நாடுகள் தற்காலம் பெருமை பெற்று விளங்குகின்றனவென்றும், தற்காலத்தில் இந்தியாவிலுள்ள 30 கோடி ஜனங்களில் 6 கோடி ஜனங்கள் ஒருவேளை வடிகஞ்சியினால் ஜீவிக்கின்றார்களென்றும், 1½ கோடி ஜனங்கள் வரை அதுவுமில்லாமல் மிகவும் வருந்தியிருக் கிறார்களென்றும், மேலும் இந்தியாவில் பெரும்பான்மையோர் விவசாயத்தையே நம்பி, வர்த்தகத்தையும், கைத்தொழிலையும் முற்றிலும் மறந்து மிகவும் சோம்பேறிகளாய்த் திரிகின்றார் களென்றும், முன்னிருந்த நிலைமைக்கு அனைவரும் ஒருங்கு சேர்ந்து பாடுபட்டு நமது கைத்தொழிலையும், வர்த்தகத்தை யும் நாளடைவில் அபிவிருத்திச் செய்யப்புகின், அங்ஙனமே நமக்கு நற்காலம் பிறந்து நமது அவாக்களையெல்லாம் முற்றிலும் தீர்த்துக் கொள்ளலாமென்றும், இன்னும் இவை போன்ற இந்தியா சம்பந்தமான அநேக காரமான விஷயங் களை எல்லாம் எடுத்துக்கூறிக் கடைசியாகப் பொது நன்மைக் காகச் சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சுதேசீய நிதிக்கு ஜனங்களனைவரும் சந்துஷ்டியான காலங்களில் அவர்களா லியன்ற பொருளுதவி செய்ய வேண்டுமென்றும் கூறி முடித்தார்.

**சுதேசமித்திரன், 12** அக்டோபர் **1906**

**திருநெல்வேலி ராஜத் துவேஷக் கேஸ்களில் சிக்ஷைகள்**

ஒருவருக்கு 10 வருஷமும், மற்றவருக்கு ஆயுசு பரியந்த மும் தீபாந்தர சிக்ஷை? நினைக்கையிலேயே மயிர்க்கூச்செரி

கிறது; கைநடுங்குகிறது. இந்தத் துக்கத்தைத் தென் இந்திய ஜனங்கள் முக்கியமாய் சிதம்பரம் பிள்ளையை அறிந்த தமிழ் நாட்டு ஜனங்கள் எப்படிச் சகிப்பார்கள்? ராஜத்துவேஷக் குற்றங்கள் நம் தேசத்தில் இதுவரையில் அடிக்கடி நேரிடுவ தில்லை. நமக்கு ஆப்த நேசராய், தமது ஜன்ம தேசம் முதலி லும் இந்தியா இரண்டாவதுமாய்த் தமது இருதயத்தில் குடி கொண்டிருக்கிறதென்று சொல்லிக் கொண்டு வந்த லார்ட் கர்ஸன் ஏழு வருஷம் ஆட்சி நடத்தினதின் பலனாக ராஜத் துவேஷக் குற்றங்கள் நேரிட்டு, ஆங்கிலேய மாஜிஸ்ட்ரேட்டு களால் தண்டிக்கப்பட்டு வருகின்றன. ஒரு கேசிலும் இந்தக் கொடுமையான சிக்ஷைகள் விதிக்கப்படவில்லை. பாலகங்கா தர திலகர் 1897ஆம் வருஷத்தில் தண்டிக்கப்பட்டபோது—அவ ருக்கு $1\frac{1}{2}$ வருஷங் கடுங்காவல் விதிக்கப்பட்டது. பிறகு ஒரு வருஷமாகக் கவர்மெண்டால் குறைக்கப்பட்டது. பிறகு நேரிட்ட கேஸ்களிலும், ஒரு வருஷம் இரண்டு வருஷம் காவல் தண்டனை விதிக்கப்பட்டதேயன்றி இந்தப் பயங்கரமான சிக்ஷைகள் விதிக்கப்பட்டதில்லை. பம்பாய் ராஜதானியில் ஒரு பத்திராசிரியர் மிகுந்த வயது சென்றவர் அவரை ஸெஷன் ஜட்ஜி 14 வருஷம் தீபாந்தர சிக்ஷை செய்தார். அது ஹைகோர்ட்டில் ஒரு வருஷமாக மாற்றப்பட்டது. பஞ்சாப் பிலும் வங்காளத்திலும் ராஜத்துவேஷக் குற்றங்கள் செய்தவர் களுக்கும் இப்படிப்பட்ட தண்டனைகள் இல்லை. "ஸ்வராஜ்யா" என்ற பம்பாய்ப் பத்திரிக்கைக்கு இரண்டு குற்றங்களுக்கு 3 வருஷம் கடுங்காவல் விதிக்கப்பட்டது. ராஜத்துவேஷக் குற்றஞ் செய்ததாக விசாரிக்கப்பட்ட இந்தியர் எவரும் இதுவரையில் தண்டனையடையாமல் விடுபட்ட தாக நாமறியோம். ஒவ்வொரு கேஸிலும் கடுமையான தண்டனையே விதிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி கேஸ் களிலும் கொடுந்தண்டனை விதிக்கப்படுமென்றே ஜனங்கள் சொல்லிக் கொண்ட போதிலும், இப்படிப்பட்ட அசுரத் தண்டனைகளை ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. கவர்ன் மெண்ட் பக்கம் கேஸ்களை நடத்தின மிஸ்டர் பௌவல், இது வரையில் சென்னை ராஜதானி ராஜபக்தி நிறைந்த தேசமா யிருந்தது; ராஜத் துவேஷக் குற்றம் செய்து விசாரணைக்கு வந்தவர்களேயில்லை; ஆகையால், இந்த ராஜதானி அதன் நல்ல பெயரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால், சிவா, சிதம்பரம்பிள்ளை கேஸ்களில் பலமான சிக்ஷைகள் விதிக்கப் பட்டு, இனி ராஜத் துவேஷ முள்ளவர்கள் வெளிக்கிளம்பாமல் செய்ய வேண்டுமென்று ஜட்ஜியைக் கேட்டுக் கொண்டார். அப்படிக் கேட்டுக் கொண்டவர்கூட இப்படிப்பட்ட தண்டனை

களை மனத்தில் எண்ணியிருக்க மாட்டார். கவர்ன்மெண்ட் வக்கீல் அப்படிக் கேட்டுக் கொண்டிராவிட்டாலும் மிஸ்டர் பின்னி குறைவான தண்டனைகள் விதித்திருக்க மாட்டார் என்றே சொல்ல வேண்டும்.

**சுதேசமித்திரன்,** தலையங்கம் 10 ஜூலை 1908

**ஆங்கிலேயரும் வருந்தினர்**

தேசபக்தர் சிதம்பரனாருக்கு விதிக்கப்பட்ட தண்டனை நியாயத்திற்கும் சட்டத்திற்கும் விரோதமானது. பிள்ளையவர்களின் தியாகம் மகத்தானது. பிரட்டீஷ் சாம்ராஜியத்தின்பால் நல்லெண்ணம் உள்ளவர்கள்கூட, இந்தக் கொடுந் தண்டனையை வரவேற்கமாட்டார்கள்.

**ஸ்டேட்ஸ்மன்,** கல்கத்தா

**வங்காளமும் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையும்**

ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்கு மரணபரியந்தம் தீபாந்திர சிக்ஷை விதிக்கப்பட்ட செய்தி கேட்டுக் கல்கத்தா பத்திரிகைகள் அனைத்தும் அலறுகின்றன. இப்படிப்பட்ட கொடிய தண்டனைகளால் பிரிட்டீஷ் நீதியதிகாரத்திற்கே பெரும் அபகீர்த்தி உண்டாகுமென்றும், இப்படித் தண்டனை விதித்த மிஸ்டர் பின்லோவை மேற்படி கேஸில் ஜட்ஜாயிருக்கும்படி சென்னை கவர்ன்மெண்டார் நியமித்தது மிகவும் ஆச்சரியமாய் இருப்பதாயும் "அமிர்தபஜார்" பத்திரிகை சொல்கின்றது. பாபு சுரேந்திரநாத பானர்ஜியின் பத்திரிகையாகிய "வங்காளி"யும் இவ்வாறே கூறுகின்றது. இதுபோலவே வங்காளத்து இந்தியப் பத்திரிகைகளெல்லாம் கூறுகின்றன. ஆனால் ஆங்கிலோ இந்தியன் பத்திரிகைகள் மட்டும் ஒன்றும் பேசாமல் இருக்கின்றன.

**சுதேசமித்திரன்,** 10 ஜூலை 1908

# வரலாறு படைத்த வ.உ.சி. வாழ்க்கை

1872 செப்டம்பர் 5—நெல்லை மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் பிறப்பு.

1894 பிப்ரவரி—வழக்கறிஞர் பயிற்சியில் தேர்ச்சி.

1895 வ.உ.சி.—வள்ளியம்மை திருமணம்.

1900 தூத்துக்குடியில் வழக்கறிஞராகப் பணி தொடங்குதல்.

1901 வ.உ.சி.—மீனாட்சியம்மை திருமணம்.

1905 மே— பொ. பாண்டித்துரைச் சாமித் தேவர் அவர்களைத் தலைவராகக் கொண்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பரிசோதக உறுப்பினராகப் பொறுப்பு.

1906 அக்டோபர் 16—சுதேசி கப்பல் நிறுவனம் தொடங்கப் பெற்றது. 1882ஆம் ஆண்டுக் கம்பெனிகள் சட்டப்படி எண் 85 கிரேட் காட்டன் சாலை, தூத்துக்குடி என்ற முகவரியைப் பதிவு அலுவலகமாகக் கொண்டு பதிவு செய்யப்பட்டது. பதிவு எண் 13 of 1906.

டிசம்பர்—சுதேசிக் கப்பல் நிறுவனத்துக்கு இரண்டு கப்பல்கள் வாங்க வ.உ.சி. பம்பாய் சென்றார். அவர் அங்கு இருக்கும்போது மூத்த மகனும் மனைவியும் உடல்நலம் குன்றியதையும் பொருட்படுத்தாமல் பம்பாயில் தங்கி, திலகரின் உதவியுடன் கப்பல்கள் வாங்கி வந்தார்.

1907 பாரதியாருடன் சூரத் காங்கிரசில் பங்கு பெற்றார்.

1908 நெல்லை தேசாபிமான சங்கம் உருவாகிறது. ஆறுமுகத்தம்பிரானைக் கொலை வழக்கில் விடுவித்துச் செல்வாக்குப் பெற்றார்.

பிப்ரவரி 3 முதல் மார்ச்சு 9 வரை தூத்துக்குடிக் கடற்கரையில் சுப்பிரமணிய சிவாவுடன் தொடர் சொற்பொழிவுகள்.

1908 பிப்ரவரி 27— தூத்துக்குடி கோரல் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் தொடக்கம்.

மார்ச்சு 9—பிபின் சந்திரபால் விடுதலையைக் கொண்டாடினார்.

மார்ச்சு 9—நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் சிவாவுடன் கலெக்டர் விஞ்சு என்பவரைச் சந்தித்தார். விஞ்சுக்கும் வ.உ.சி.க்கும் நடந்த உரையாடலைப் பாரதியார் இரண்டு பாடல்களாகப் பாடியுள்ளார்.

மார்ச்சு 12—வ.உ.சி.யும் சுப்பிரமணிய சிவாவும் கைது செய்யப்பட்டனர்.

மார்ச்சு 13—வ.உ.சி. கைது செய்யப்பட்டதை எதிர்த்து, திருநெல்வேலியிலும் தூத்துக்குடியிலும் கடையடைப்பு, எதிர்ப்பு ஊர்வலங்கள், எழுச்சி.

மார்ச்சு 26—கூடுதல் மாவட்ட நீதிபதி வாலஸ் வழக்கு விசாரணையைத் தொடங்கினார்.

ஜூலை 7—மாவட்ட நீதிபதி பின்கே, வ.உ.சி.க்கு ஆயுள் தண்டனை வழங்கினார்.

நவம்பர் 4—உயர்நீதிமன்றத்தில் ஆயுள் தண்டனை, ஆறு ஆண்டுகள் நாடு கடத்தலாகக் குறைக்கப்பட்டது. பிறகு, இதுவே ஆறு ஆண்டுகள் கடுஞ்சிறையாக மாற்றப்பட்டது.

1911 ஜூன் 17—மணியாட்சியில் மாவட்ட மாஜிஸ்டிரேட் (கலெக்டர்) ஆஷ், வாஞ்சிநாதனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1912 டிசம்பர் 12—கண்ணனூர் சிறையிலிருந்து வ.உ.சி. விடுதலை செய்யப்பட்டார். ஆயினும் நெல்லை மாவட்டத்தில் நுழையத் தடை நீடித்தது.

1915 மார்ச்சு 6—லோகமாண்ய பால கங்காதர திலகரின் அழைப்பை ஏற்று, பூனா வந்து சேர்ந்தார்.

மார்ச்சு 8—திலகருடன் முதல் உலகப் போர் பற்றியும் ஜெர்மனி உதவியுடன் இந்தியாவில் புரட்சி நடத்துவது பற்றியும் விவாதித்தார்.

1919 மார்ச்சு—ரௌலட் சட்டத்தை எதிர்த்து நடந்த சத்தியாகிரகத்தையொட்டி காந்திக்கு ஆதரவு தந்தார்; காந்தியைச் சென்னையில் வரவேற்றுப் பேசினார்.

டிசம்பர்—சென்னை வந்திருந்த திலகருடன் சந்திப்பு. திலகர் தொடங்கிய ஹோம்ரூல் இயக்கத்தில் அன்னி பெசண்ட் அம்மையார் சேர்ந்திருந்தது குறித்து மாறு பட்ட கருத்தைத் தெரிவித்தார். அதனால் அந்த இயக்கத்தில் சேராதிருந்தார்.

1920 கல்கத்தா காங்கிரசில் கலந்து கொண்டார். காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தை எதிர்த்துக் காங்கிரசி லிருந்து விலகினார். கோவை வாசம்.

1924 வழக்கறிஞர் பணி செய்ய இருந்த தடை நீங்கி, சன்னது பெற்றுக் கோவில்பட்டியில் குடியேறினார். நெல்லை மாவட்டத்தில் நுழையக்கூடாது என்ற தடையும் நீங்கியது.

ஒத்துழையாமை இயக்கத்தைத் திருப்பிப் பெற்ற வுடன் மீண்டும் காங்கிரசில் சேர்ந்தார். சேலம் மாவட்ட அரசியல் மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்தினார். ஆயினும் அரசியலில் தீவிர ஈடுபாடு கொள்ளவில்லை.

1933 காந்தியுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்த போதும் அவரது அரிசனக் கொள்கையை ஆதரித் தார் வ.உ.சி. அரிசனச் சுற்றுப்பயணம் மேற் கொண்டு காந்தி தமிழகம் வந்தபோது காரைக்குடி யில் அவரை வரவேற்க நடந்த ஏற்பாட்டுக் கூட்டத் துக்கு வ.உ.சி. தலைமை தாங்கினார்.

1934 திருச்செந்தூரில் வ.உ.சி.யின் திருக்குறள் உரை வெளி யிடப்பட்டது.

1935 அப்போது காங்கிரசின் தலைவராக இருந்த பாபு ராஜேந்திரப் பிரசாத் தென்னிந்தியச் சுற்றுப் பயணத்தின்போது தூத்துக்குடி சென்று வ.உ.சி.யைச் சந்தித்து மரியாதை செய்தார்.

1936 நவம்பர் 18—மறைவு.